# திருக்கோயில்

மார்ச் 1993 விலை ரூ 3





மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில் தைப்பூசத் தெப்போற்சவம் 6.2.93 அன்று மிகச் சிறப்பாக நிகழ்த்தப்பெற்றது. செய்தி மற்றும் சுற்றுலாத்துறைகளின் செயலரும் நம் அறநிலையத்துறையின் ஆணையாளருமான திருமதி சி. கே. கரியாலி ஐ.ஏ.எஸ்., அவர்கள் தெப்போற்சவ வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். துணை ஆணையாளரும் அருள்மிகு கபாலீசுவரர் ஆலய நிர்வாக அதிகாரியுமான திரு கு. சிதம்பரம் பி.ஏ.. அவர்கள் உடன் உள்ளார்கள்.

முகப்பு:

அருள்மிகு
இருக்கங்குடி மாரியம்மன்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A.,Ph.D.

| மாலை 35 | திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆங்கீரச ஆண்டு பங்குனி<br>மார்ச் 1993 விலை ரூ. 3 00 | மணி: 3 |
|---|---|---|

திருக்கோயில் வாசகர்களுக்கு
அறிவிப்பு

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர் களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

*உயர்திரு ஆணையர் அவர்கள்*
*இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை*
*சென்னை — 600 034*

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

### சந்தா விவரம்

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18 00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36 00 |
| ஆயுள் | | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்

அருளாளர்கள் அருள் அனுபவம்
—திருமந்திரச் செம்மல்
திருமிகு டி. வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்.

''பாரதப் போரில் பார்த்தசாரதி''
— நூல் அறிமுகம் — நிறைமதி.

நம் நாட்டுச் சித்தர்கள்.
—டாக்டர் இரா. மாணிக்கவாசகம்.

கோதானம்
—க. குழந்தைவேலன் எம்.ஏ.

கீதைக் குறள்கள்—அறநெறியண்ணல்
கி. பழநியப்பனார்.

மருதமலை மாமணியே முருகய்யா
—ஜ. பக்கிரிசாமி பி.எஸ்சி., பி.எல்.

சித்திரபாரதம் —செவ்வேள்.

மதுராந்தகம் ஏரிகாத்த ராமர்.
—ஜ. கல்யாணம் எம்.ஏ.

சென்னை அருள்மிகு ஏகாம்பரேசுவரர் ஆலயம்—தலவரலாறு.
—பண்டித நடேசனார்.

அறுமுகன் அமர்ந்த ஆறுபடை வீடுகள்.
—புலவர் தருமாம்பாள்.

ஆடல் காணீரோ திருவிளையாடல் காணீரோ.
—கம்பன்கவிநயமணி வே. தியாகராஜன்.

கந்தவேள் கருணை
—டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு

# அருளாளர்களின் அருள் அனுபவம்



திருமந்திரச்செம்மல்

**டி.வி.வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்**

*திருமிகு தலைமைச் செயலாளர் அவர்கள்*



**(20)**

இறைவன் நமது புலன்களுக்குப்புலப்படுவதில்லை. புலனறிவு சிற்றறிவாகும். புலனறிவைக் கொண்டு பேரறிவைக் காண இயலாது. சிற்றறிவு என்பது ஓர் சிறிய வட்டமாகும். நாம் எல்லோரும் அந்த வட்டத்தின் வரம்பிற்குள் இருக்கின்றோம். பேரறிவானது எல்லையற்றது. வரம்பற்றது. ஆறு ஆவது கடலில் கலந்து மறையலாம். ஆனால், கடல் ஆற்றில் மறைந்து போவதில்லை. சிற்றறிவு பேரறிவிலே சங்கமம் ஆகலாம். ''அறிவு அறிவுள்ளே அழிந்தது போல' என்பார் திருமூலர். ஆனால், பேரறிவுக்குச்சிற்றறிவினால்ஈடுகட்டஇயலாது.

சிற்றறிவைப் பெற்றுள்ள நமது நிலைமை கிணற்றில் வசிக்கும் ஆமையின் நிலைமையைப் போன்றதாகும். கிணற்று ஆமை கடலில் வசிக்கும் ஆமையைப் பார்த்து ''உங்கள் கடல் எங்கள் கிணற்றுக்கு ஒப்பாகுமோ? என்று கேட்டால் அது அந்தக் கிணற்று ஆமையின் அறியாமையைத் தானே குறிக்கும்! வினைகளால் உந்தப்பட்டு நாம் நமது வாழ்க்கைனய நடத்தி வருகின்றோம். அறிவைவிட அறியாமை என்கின்ற அடிப்படையில்தான் நம்முடைய வாழ்க்கை நடந்து வருகின்றது. இந்த அறியாமையைப் பெருக்க நாம் மேலும் பேலும் செய்யும் வினைகள் வித்திட்டு வருகின்றன. அந்த நிலையில் நம்மில் பலர் கடவுளே இலலை என்று சொல்லி நம்முடைய மனதில் இருந்து அந்த எண்ணத்தையே விலக்கி விடுகின்றோம். வேறு பலர் இறைவனைக் காண்பது அரிது என்று சொல்லி அவனைக் காண தாம் பேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் பயன் தராது என்று சொல்லியும் தம்மை தாமே திருப்தி செய்து கொள்கின்றார்கள். இது 6:ன்ன பேதமை என்கிறார் திருநாவுக்கரசர்.

''கூவல் ஆமை குரைகடல் ஆமையைக்
கூவ லோடுஒக்கு போகடல் என்றல்போல்
பாவ காரிகள் பார்ப்பரிது என்பரால்
தேவ தேவன் சிவன்பெருந் தன்மையே''.


உண்மையில் இறைவனுடைய அருட்சக்தியே இந்த வினைகளைச் செய்ய வைக்கின்றது. பாசத்தைக் கொடுக்கின்றது. உயிரை மலங்களோடு சேர்த்து வைக்கின்றது. இறைவனுடைய மறைப்புச் சக்தி காரணமாக நாம் இறைவனை அறிவதில்லை. இறைவன் நம்மிடமிருந்து மறைந்து நிற்கின்றான். நம்முடைய கண்கள் புறப்பொருட்களைப் பார்க்கும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றன. ஆனால், நம்முள் நிற்கும் இறைத் தன்மையை காண முடிவதில்லை. 'கண் ஒன்று பல காணும்; தனைக் காணா; அண்ணலும் இவ்வண்ணம் ஆகி நின்றானே'' என்கிறார் திருமூலர். எனவேதான் இறைவனை மறைபொருள் என்று குறிப்பிடுவது உண்டு. இநத மறைபொருள் புலனறிவுக்கு அப்பாற்பட்டது. இன்னதென்றுசொல்லி குறிப்பிட்டு உணர்த்த இயலாது. இறைவன் மறைபொருளான காரணத்தினால் அவனை எழுத்தாலோ, வாக்காலோ கட்டுப்படுத்த முடியாது. இதைத்தான் திருமூலர்

''காட்டுங் குறியும் கடந்தவர் காரணம்
ஏட்டின் புறத்தில் எழுதிவைத் தென்பயன் ?''

(திருமந்திரம்..2937)

என்பார்.

**யாவர்க்குமாம் இறைவற் கொரு பச்சிலை**
**யாவர்க்குமாம் பசுவுக் கொரு வாயுறை**
**யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரை தானே ! —திருமந்திரம்.**



இந்தக் கருத்தை மேலும் விளக்குகின்றார் திருமூலர். பரம்பொருள் எழுத்துக்களுள் அடங்கி நிற்காதவன். சிற்றறிவுக்கு உட்பட்ட பொருளை எழுத்தாலும் வாக்கினாலும், விரிவுரையாலும், வாதத்தாலும் விளக்கி விடலாம். அறிந்து கொள்ளலாம். ஆனால், பரம்பொருள் இவற்றிற்கு அப்டாற்பட்ட து. பரம்பொருளைப் பொறுத்தவரை நம்முடைய அறிவு ஒரு எல்லைக் கோட்டில்நின்று விடுகின்றது. அந்த எல்லைக் கோட்டைத்தாண்ட நாம் அறிவைக் கொண்டுஎடுக்கும் முயற்சிகள்வெற்றிபெறாது. பரந்த, வரிந்த கடலின் மற்றொரு கரையை நாம் கண்களாலேயே நாம் கண்டுகொள்ள முடியுபா? கரையற்ற டெரும் வெள்ளம்அடித்து வரும்போது அதனுடைய கரையைக் காண்பது மிகவும் கடினம் அல்லவா? அதேபோல உரையற்ற இறைவனுடைய தன்மையை நப்முடைய புலனறிவினால் மட்டும் கண்டு கொள்ள முடியாது.

''உரையற்ற தொன்றையுரைசெய்யுமூடர்காள்
கரையற்ற தொன்றைக் கரைகாண
லாகுமோ?''
(திருமந்திரம்...2955)

நமது அறிவுக்கு எட்டாத பரம்பொருளை மறைபொருள் என்கின்றோம். ஆனாலுப் இறை என்னும் உண்மையை திருமூலரைப் போன்ற மகான்கள் முழுமையாக அனுபவித்தவர்கள். அவ்வாறு அனுபவித்த திருமூலர் இறைவனை அனைத்து உலகுககும் தலைவனாகக் காண்கின்றார். உயிருக்கு உயிராய் உயிர்களின் அறிவில் டொருந்திபிருத்தலைக் காண்கின்றார். அண்டத்தில்—உலகெங்கிலும் நிறைந்து நிற்பதை காண்கின்றார். உள்ளத்தில் தியானப் பொருளாக விளங்கி நிற்பதை அனுபவிக்கின்றார். இறைவனுடைய அருளின் தன்மையை உணருகின்றார். பொய்மை நிறைந்த உடலில் உயிர்ப்புச் சக்தியாக உட்புகுந்து வெளிவருதலை காண்கின்றார். அதே நேரத்தில் உயிர்களின் புலனறிவால் அறியப்படாது மறைந்து நிற்பவனாக கள்ளத் தலைவனாகக் காண்கின்றார். மற்றவர்கள் இந்த உண்மையைத் தெரிந்து கொள்ளவில்லையே என்றும் நினைத்துக் கொள்கின்றார்.

''உள்ளத்து ளேதான் உகந்தெங்கும் நின்றவன்;
வள்ளற் றலைவன்; மலருறை மாதவன்;
பொள்ளற் குரம்பைப் புகுந்து புறப்படும்
கள்ளத் தலைவன் கருத்தறி யார்களே''

(திருமந்திரம்..1531)

கள்ளத் தலைவன் என்னும் சொல் எத்துணைக் கருத்துக்களை உள்ளடக்கி வைத்துள்ளது! இறைவன் சகல உயிர்களுக்கும் தலைவன்தான். ''தானே உலகில் தலைவனெனத் தகும்; தானே உலகுக்கு ஓர் தத்துவமாய் நிற்கும்'' என்கிறார் திருமூலர். எனினும் அவன் ஓர் கள்ளத் தலைவன். நம்மால் அறியப் படாது அவன் நிற்பதால் இவ்வாறு அழைக்கப் படுகின்றான். அவன் நம்மிடமிருந்துமறைந்து நிற்பதால் மட்டும் அவன் நம்மிடையே இல்லையென்று சொல்லிவிட முடியாது. இதைப்பற்றி சற்று சிந்தித்துப்பாருங்கள்என்கிறார்திருமூலர். ''இறைவன் அண்டங்களில் பரவி நிற்கின்றான் என்று சிலர் கருதுகின்றீர்கள். அப்படியே இறைவனும் அண்டங்களில் பரந்து நிற்பான். இல்லை இல்லை இறைவன் நம் உள்ளத்திலேயே குடிகொண்டுள்ளான் என்று சிலர் நினைப்பீர்கள். நீங்கள் நினைப்பது போலவே இறைவன் உங்கள் உள்ளத்தில் குடிகொண்டிருப்பான். இல்லை இல்லை பரம்பொருள் என்று ஒன்றுமில்லை. அதெல்லாம் ஒரு கற்பனை. அது உள்ளத்திலும் இல்லை. வெளியிலும் இல்லை என்று நீங்கள் நினைத்தால் உங்களுடைய மனதில் அந்த எண்ணமே உண்மை எனப் புலப்பட்டுக் கொண்டிருக்கும். பரம் பொருளானது உங்களுடைய எண்ணங்களுக்கு எல்லாம் அப்பாற்பட்டது!'' என்கிறார் திருமூலர்.

''உள்ளத்தும் உள்ளன், புறத்துளன் என்பவர்க்
குள்ளத்தும் உள்ளன்; புறத்துளன் எம்மிறை;
உள்ளத்தும் இல்லை; புறத்தில்லை என்பவர்க்
குள்ளத்தும் இல்லை; புறத்தில்லை தானே''
(திருமந்திரம் .1532)

இறைவனைக் கண்டுகொள்ள அறிவை ஒதுக்கிவைத்துவிட்டு உணர்வைப் பயன்படுத்த வேண்டும். உணர்வு என்பது அவனருளே. அதுவே மறைபொருளை நம் முன் நிறுத்தி வைக்கின்றது. அந்த உணர்வே இறைவனுடைய உண்மைத் தன்மையை நமமுள் வெளிப் படுத்துகின்றது. அப்போது இறைவன் ஒருவன் அல்லது ஒருத்தி அல்லது ஒரு ஊரைச் சேர்ந்தவன், இத்தகைய நிறத்தையும் வண்ணத்தையும் கொண்டவன், இப்பேர்ப்பட்டவன் என்றெல்லாம் பேசாமல் பரம்பொருள் எத்தகையது என்கின்ற உண்மையை நாம் கண்டுகொள்கின்றோம் என்கிறார் மாணிக்கவாசகர். அந்த உணர்வு வரும் வரை நம்முடைய மனது சஞ்சலத்திலே தொடர்ந்து மூழ்கி இருக்கும் நிலையில் மனதில் ஒரு தெளிவு ஏற்படுவதில்லை.

'' ஒப்புடைய னல்லன் ஒருவ னல்லன்
ஓரூர னல்லன் ஒருவ னில்லி
அப்படியும் அந்நிறமும்அவ் வண்ணமும்
அவனருளே கண்ணாகக் காணி னல்லால்
இப்படியன் இந்நிறத்தன் இவ்வண் ணத்தன்
இவனிறைவன் என்றெழுதிக் காட்டொ
ணாதே.
— மாணிக்கவாசகர்.

கடவுள் என்னும் பேரின்பத்தை அனுபவிக்க தெளிந்த சிந்தை தேவைப்படுகிறது. மனதிலே எண்ணங்கள் வாயு வேகத்தில் ஓடிக் கொண்டிருக்கும்போது ஆழ்ந்த சிந்தனைகளுக்கு இடம் கிடைக்காது. நீரின் பரப்பில் காற்றினால் அலை அடிக்கும்போது ஆழத்தைக் காண முடியாது. அசைவற்ற நீரிலே ஆழத்தை காணலாம். அசைவற்ற மனமே தெளிந்த மனமாகும். தெளிந்த மனதிலே புலனறிவு அடங்கி உணர்வாகிய ஒளி தோன்றும். இறைவனே அந்த உணர்வாவான். ''உணர்வும் அவனே, உயிரும் அவனே; புணரும் அவனே புலவி அவனே'' என்கிறார்திருமூலர். தெளிந்த சிந்தை பெற்றார்க்கு இறை உணர்வு இயல்பாகவே தோன்றும்.

''திரையற்ற நீர்போற் சிந்தைதெளி வார்க்குப்
புரையற்று நின்றான் புரிசடை யோனே''
(திருமந்திரம்..2955)

சீவன் சிவலிங்கமாவதற்கு வழியும் அதுவே என்கிறார் திருமூலர். அதாவது நம்முடைய சிந்தையை நாம் தெளிந்த நிலையில்வைத்துக் கொள்ள வேண்டும். புலனறிவினால் நமது மனதிலே ஏற்படும் சஞ்சலங்களின் தன்மை குறைய வேண்டும். சஞ்சலங்கள் வினைகளுக்குக் காரணமாக இருக்கின்றன. வினைகள் வளர வளர மனமும் சித்தமும் அவற்றால் நிரப்பப்பட்டு தங்களுடைய உண்மைஇயல்பைப் பறிகொடுத்துவிடுகின்றன. அப்படி விடாமல் புலன்களின் நடவடிக்கைகளில் ஈடுபடாமல் சித்தத்தை தெளிய வைத்தவர்களுக்கு இறை உண்மை தோன்றும். வஞ்சனைசெய்து மனதை தவறான வழிகளில் ஈடுபடச்செய்யும் புலன்கள் நெறிபடுத்தப்படும் போது ஒளி பொருந்திய விளக்காக அமையும்.

''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே''
(திருமந்திரம்...1823)

இதையே மேலும் விளக்கும் வகையில் உள்ளது பின்வரும் திருமந்திரம்:

''சிந்தைய தென்னச் சிவனென்ன வேறில்லை
சிந்தையி னுள்ளே சிவனும் வெளிப்படும்
சிந்தை தெளியத் தெளியவல் லார்கட்குச்
சிந்தையி னுள்ளே சிவனிருந் தானே''
(திருமந்திரம்..2853)

திருமூலர் இறை உணர்வை அனுபவித்து, ஞானம் பெற்ற திருமந்திரத்தை நமக்கு அளித்துள்ளார். தெய்வீக அனுபவத்தை விளக்குவது கடினம். நாம் பேசும் மொழி இந்தவிஷயத்தில் ஓரளவுதான் நமக்குத் துணை புரியும். தமிழ் மொழி ஓர் சிறந்த தொன்மையான மொழியாகும். உள்ளத்திலே தோன்றுகின்ற பல நுட்பமானவற்றை தமிழ் மொழி விளக்குவது போல வேறு மொழிகள் விளக்குவதில்லை என்று அறிஞர்கள் கருத்து தெரிவிக்கின்றனர். ஒரு மொழியினுடைய பெருமை, அந்த மொழி வெளிப்படுத்தும் எண்ணங்கள், கருத்துகள், உணர்வுகள் ஆகியவற்றின் நுட்பத்தையும், ஆழத்தையும் பொறுத்து இருக்கும். அந்த வகையில் பார்த்தால் தமிழ் மொழியின் பெருமை அளவிடற்கரியது என்று எல்லோரும் போற்றுகின்றனர். இந்த நூற்றாண்டின் புகழ் பெற்ற விஞ்ஞானி ஐன்ஸ்டீன் அவர்கள் ஒரு சொற்பொழிவில் இறை உண்மை போன்ற

உயர்ந்த எண்ணங்களை வெளிப்படுத்த நமது மொழிகளில் சொற்கள் இல்லையே என்று கூறினார். அவருக்குத் தமிழ் தெரியாது. தமிழைப் படிக்க அவருக்கு வாய்ப்பு கிட்டியிருந்தால் தமிழ் மொழியின் அருமையை அவர் நன்குஉணர்ந்துகொண்டிருப்பார். புலன்களால் அனுபவிக்க முடியாத ஒன்றை, பரம்பொருளை தங்கள் உணர்வினாலே அனுபவித்து நாயன்மார்களும் ஆழ்வார்களும் இனிய தமிழில் பாடி அந்த உணர்வுகளை நமது உள்ளங்களில் ஆழப் பதிய வைத்த அந்த சாதனை வியக்கத்தக்க ஒன்றாகும் அல்லவா!

உள்ளத்திலே தெளிவு இருந்தால், மனதிலும் வாக்கிலும் தெளிவு இருக்கும். உள்ளத்திலே குழப்பம் இருந்தால், குழம்பிக் கிடக்கின்ற மனதில் இருந்து குழப்பமான வாக்கு தான் வெளிவரும். தெளிந்த உள்ளத்திலிருந்து வெளிவரும் வாக்கு ஆழமுடையதாக இருக்கும். காலம் கடந்ததாக இருக்கும். உண்மையை அப்படியே பிரதிபலிக்கும். தெளிவற்ற மனம் சொற்களை கொட்டிக்கொண்டே இருக்கும். அவற்றில் ஆழம் இராது. தொடக்கமோ முடிவோ இராது. அவற்றில் சிந்திக்கத்தகுந்த அல்லது பயன்படுத்தக்கூடிய கருத்துக்களோ அமைந்திராது. ஆழ்ந்த சிந்தனையுடையவர்கள் அதிகமாகப் பேசமாட்டார்கள். அந்த நிலையையே ஒரு சிறந்த நிலை என்கின்றார் திருமூலர். 'பெற்றார் உலகில் பேசார் பெருமையே' என்பார் அவர். அதே நேரத்தில் திருமூலரைப் போன்ற சித்தர்கள் மக்களுடைய வாழ்க்கையின் அமைதியிலும், ஆன்மீக வளர்ச்சியிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். தாங்கள் பெற்ற பேரின்பத்தை பிறருக்கு விளக்கி எல்லோரும் ஆன்மீக அனுபவத்தை பெறச் செய்வதற்கான முயற்சியில் அவர்கள் எப்பொழுதும் தம்மை ஈடுபடுத்திக் கொள்வார்கள். இறைவன் அருளால் மனப்பக்குவம் அடைந்த, ஞானப் பொருளைப் பற்றிய நுட்பமான உபதேசத்தைப் பெற தகுதியுடைய சீடர்களுக்கு அவர்கள் தங்கள் விளக்கத்தை அருளிச் செய்வதன் தன்மை வேறு. ஆனால், விவரம் அறியாத பாமர மக்களுக்கு ஆன்மீக நுட்பங்களை விளக்குவதின் தன்மை வேறு. திருமூலர் ஒன்பதாம் தந்திரத்தில் சூன்ய சம்பாஷணை என்கிற பகுதியில் கையாளும் முறை ஆன்மீகத்தின் ஆழ்ந்த, நுண்ணிய கருத்துக்களையும், அனுபவங்களையும் சுவைபட, படிப்போர் கேட்போர் மனதில் நிலைத்து நிற்கும் வகையில் அமைந்துள்ளது. இதை மறைமொழி எனலாம். மேலாகப் பார்த்தால் சொற்களின் பொருள் ஒருவகையாக இருக்கும். ஆனால், அவற்றின் உட்கருத்து வேறு ஒரு வகையாக இருக்கும். சற்று யோசித்தால் பொருள் எளிதில் விளங்கிவிடும். சொற்களில் ஆழ்ந்த ஞானப்பொருள் பொதிந்து கிடப்பதைப் பார்க்கலாம். படிப்போருக்கு இன்பம் கிட்டும். நம்மை அறியாமலேயே பாடல்களில் உள்ள பொருள் பற்றிய ஒளி நமது உள்ளத்திலே தோன்றிவிடும். ஆழ்ந்த ஞானம் பெறுவதற்கு இதை ஒரு வழியாகவும் எடுத்துக் கொள்ளலாம். பௌத்த சமயத்தில் ZEN என்னும் ஞான மார்க்கத்தை பின்பற்றும் அறிஞர்கள் இந்த உத்தியை பரவலாகக்கையாளுகிறார்கள். திருமந்திரத்தில் மறைபொருளைப் பற்றிமறைவாகப் பேசி ஞானம் போதிக்கும் பாடல்கள் பலஇடங்களிலே காணப்படுகின்றன. அவற்றில் சிலவற்றைத் தெரிந்து கொள்ளலாம்.

படைத்தல் தொழிலுக்குக் காரணமாக இருப்பவன் இறைவன். உயிரானது உடலில் புகுதலும், வெளிவருதலும் அவன் அருளாலே நடக்கின்றது. இதை அறிந்து கொள்ளாமல் பிறப்பை நாம் புரியும் சாதனை எனநல்லவா நினைக்கின்றோம். உண்மையில் வித்திட்ட தந்தைக்கு என்ன நடக்கின்றது என்று தெரிவதில்லை. ஏற்றுக் கொண்ட தாயோ அதனுடைய விவரத்தை அறிவதில்லை. படைப்புத் தொழிலை செய்து வரும் பிரம்மனாகிய தட்டான் இது பற்றி தாய் தந்தையருக்கு விளக்கம் கூறுவதில்லை. ஐந்தொழில்கள் நடந்தேற நெறிகளை அமைத்துக் கொடுக்கும் இறைவன் எங்கும் உள்ளான். ஆனால், பிறப்பின் ரகசியத்தை அவன் வெளிப்படுத்துவதில்லை. இந்த நிலையிலும் மக்கள் தான் என்கிற செருக்கில் மாயையால் உந்தப்பட்டு அறியாமையில் மயங்கி நிற்கின்றனரே!

''இட்டான் அறிந்திலன் ஏற்றவள் கண்டிலள்
தட்டான் அறிந்தும் ஒருவர்க் குரைத்திலன்
பட்டாங்கு சொல்லும் பரமனும் அங்குளன்
கெட்டேன் இம்மாயையின் கீழ்மையெவ்
வாறே''

(திருமந்திரம் 486)

பிரம்மன், விஷ்ணு, ருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்கிற ஐந்து தேவர்களும் ஐந்தொழிலைப்புரிந்துவருகிறார்கள். ஐம்பூதங்களாலான உடம்பாகிய நிலத்தில் ஐம்புலன்கள் இந்திரியங்கள் இவற்றின் வழியாக அவர்கள் தத்தம் பணிகளைச் செய்து வருகின்றார்கள். இதைத் திருமூலர் ''ஐவருக்கு ஒரு செய்(நிலம்) விளைந்து கிடந்தது'' என்பார். இவர்கள் இந்த நிலத்தைபேணிக் காத்து வருவார்கள். அதாவது இந்த உடம்பினை ஓம்பி, அந்த உடம்பிலே தங்குகின்ற உயிருக்கு வினைப் போகத்தை ஊட்டி வருவார்கள். ஐம்புலன்களும் தங்களுடைய ஆட்டத்தை ஆடி நாளடைவில் இளைத்து விடுகின்றன. இவ்வுடலினால் நுகர வேண்டிய வினைக்கூட்டங்கள் முடிவு பெறுகின்றன. இறைவனிடமிருந்து உயிருக்கு 'கிளம்பு' என்று அழைத்து இறுதிச் சீட்டு வந்து விடுகின்றது. உடனே ஐவரும், மற்ற நுண் சக்திகளும் இந்த ''செய்'' ஆகிய நிலத்தை விட்டு பறந்து விடுகின்றன, ''ஐவரும் அச் செய்யை காவல் விட்டாரே'' என்கிறார் திருமூலர்.

''ஐவர்க் கொருசெய் விளைந்து கிடந்தது
ஐவரும் அச்செய்யைக் காத்து வருவர்கள்
ஐவர்க்கு நாயகன் ஓலை வருதலால்
ஐவரும் அச்செய்யைக் காவல்விட் டாரே''

(திருமந்திரம் 188)

இந்த உடலில் குடிகொண்டுள்ளது உயிராகும். உயிரே ஐம்பொறிகளுக்கு நாயகனாகும். இந்த உடலாகிய ஊருக்கு தலைவனாக இருப்பதும் இந்த உயிராகும். உயிர் தான்

வாழ்வதற்காக, உய்வதற்காக ஒருகுதிரையைப் பயன்படுத்துகின்றது. அந்தக் குதிரைதான் பிராணவாயு என்கிற உயிர்க்காற்று. இந்தக் குதிரையை அடக்கி ஓட்டுவது மெத்தக் கடினம். அடிக்கடி சண்டி செய்யும். ஆனால், இறைவனிடம் பற்று கொண்டுள்ள மெய்யர்கள் பிராண வாயுவாகிய குதிரையின் மீது ஏறி அமர்ந்து கடிவாளத்தைப் பற்றும்பொழுது அவர்களுடைய கட்டுப்பாட்டுக்கு அடங்கி ஓடும். ஆனால், உலகப் பற்றுடன் கீழ்நோக்கிச் செல்லும் எண்ணங்களுடன் அந்தக் குதிரையை வசப்படுத்த முயலும். மெய்யுணர்வு இல்லாத பொய்யர்களை இந்தக் குதிரை துள்ளி எழுந்து தரையிலே வீழ்த்தி விடும். அதாவது பிராணாயாமம் என்கின்ற பயிற்சி யோக சாதனையில் ஒரு முக்கியமான கட்டமாகும். இதைக் கவனமாகக் கற்க வேண்டும். வெறும்பிராணாயாமம் மட்டும் போதாது. மெய்யுணர்வைப் பற்ற வேண்டும் என்கிற குறிக்கோளுடன் வாழ்க்கையிலே இயம நியமங்களை கடைப்பிடிக்கும் பொழுதுதான் பிராணாயாமத்தின் முழுப் பலனும் வெளிப்படும்.

''ஐவர்க்கு நாயகன் அவ்வூர்த் தலைமகன்
உய்யக் கொண்டேறுங் குதிரை
மற்றொன்றுண்டு
மெய்யர்க்குப் பற்றுக் கொடுக்கும்
கொடாதுபோய்ப்
பொய்யரைத் துள்ளி விழுத்திடுந் தானே''.
(திருமந்திரம்..564)

உழவன் நிலத்தை நன்றாக உழுது பயிரிட்டு, பாத்தி கட்டி, தண்ணீர் பாய்ச்சி, உரம் முதலியவற்றைப் போட்டுப் பயிரை வளர்க்கின்றான். பயிரோடு களைப் பூண்டுகளும் வளர ஆரம்பிக்கின்றன. நாளடைவில் இந்தப் பூண்டுகள் முற்றிலும் வளர்ந்து பயிரையே அழித்து விடுகின்றன. பயிருக்குரிய உணவுப் பொருள்களை, உரத்தை, அவைகளே எடுத்துக் கொள்கின்றன. நல்ல பயிர் முளைக்க பூண்டுகளைக்களையவேண்டும். அந்தப்பூண்டுகளைக் களையும் வகையை அறியவில்லையென்றால் பயிருக்கே நாசம் வந்துவிடும். அதே போல உடலாகிய நிலத்தில் உயிரானது தூய்மையான நெறியை கடைப்பிடித்து முன்னேற வேண்டும். உயிர் இந்த முயற்சியிலேவெற்றி பெறாதவாறு காமம், வெகுளி, மயக்கம் போன்ற பூண்டுகள் தடை செய்கின்றன. இவற்றை அகற்றி சிவனெறிப் பயிரை வளர்க்கும் வகையினைத் தெரிந்து கொள்ள வேண்டும். அப்பேர்ப்பட்டவர்கள் ஏனையோர்களால் அன்பு வைத்து போற்றப்படுபவர்கள் ஆவார்கள்.

''தூறு படர்ந்து கிடந்தது தூநெறி
மாறிக் கிடக்கும் வகையறி வாரில்லை
மாறிக் கிடக்கும் வகையறி வாளர்க்கு
ஊறிக் கிடந்ததென் உள்ளன்பு தானே''.
(திருமந்திரம்..2867)

ஆன்மிகப் பாதையில் நாம் முன்னேற வேண்டுமென்றால் பல முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. முதலில் ஞான சாதனை புரிய வேண்டுமென்கிற எண்ணம் மனதில் தோன்ற வேண்டும். அதுவே இறைவனுடைய அருளாகும். அந்த எண்ணத்தை நிறைவேற்ற யோகப் பயிற்சிகளை மேற்கொள்ளலாம். இதன் விளைவாக வைராக்கியமாகிய பாகல் கொடி கிடைக்கின்றது. அத்துடன் நின்றுவிடக் கூடாது. தத்துவ ஆராய்ச்சியையும் புரியவேண்டும். மெய்ப்பொருளைப்பற்றியஅறிவினைப் பெற தத்துவங்களிலும்ஈடுபட வேண்டும். இது புழுதியைத் தோண்டுவதாகும். அப்பொழுது சிவத்தைப் பற்றிய அறிவு ''பூசணி'' உள்ளத்திலே தோன்றும். வைராக்யம், அறிவு போன்றவை தோன்ற ஆரம்பித்தவுடன் நமக்கு விஷய அனுபவங்களைக் கொடுத்துக் கொண்டு வரும் இந்திரியங்கள் போன்றவை தங்களுடைய செயல்களைக் கட்டுப்படுத்திக் கொள்ளும். இதைத் திருமூலர் ''தொழுது கொண்டே ஓடினார் தோட்டக் குடிகள்'' என்பார். முடிவில் ஆன்ம லாபமாகிய வாழைக்கனியை நாம் பெறலாம். வாழைக்கனி மெய்ப்பொருளைப் பற்றியஅறிவு உள்ளத்திலே எழுந்தவுடன் வரும் பேரின்பத்தைக் குறிக்கும்.

''வழுதலை வித்திடப் பாகன் முளைத்தது
புழுதியைத் தோண்டினேன் பூசணி பூத்தது
தொழுதுகொண் டோடினார்தோட்டக்குடிகள்
முழுதும் பழுத்தது வாழைக் கனியே.''
(திருமந்திரம்..2869)

உடம்பானது உயிரின் அனுபவங்களுக்காக படைக்கப்பட்டுள்ளது. உடலின் தலைவன் 'பார்ப்பான்' என்று கூறப்படும் உயிராகும். இந்த உடலிலே இந்திரியங்களாகிய கறவைப் பசுக்கள் ஐந்து உள்ளன. அவை அடக்குவாரின்றி விருப்பம் போல வெறிகொண்டு செல்கின்றன. அவற்றை அடக்கி நடாத்திச் செல்வதற்கு ஓர் மேய்ப்பார் வேண்டும். சிவனருளே இந்த மேய்ப்பார் ஆகும்.

''பார்ப்பான் அகத்திலே பாற்பசு ஐந்துண்டு
மேய்ப்பாரும் இன்றி வெறித்துத் திரிவன
மேய்ப்பாரும் உண்டாய் வெறியும்அடங்கினாற்
பார்ப்பான் பசுஐந்தும் பாலாச் சொரியுமே''
(திருமந்திரம்..2883)

திருமந்திரத்தில் வரும் சூன்ய சம்பாஷணை என்னும் பகுதி ஓர் அருமையான படைப்பு. ஆன்மீகக் களஞ்சியம். மெய்யுணர்வைப் பற்றிய பல நுட்பமான உண்மைகள் எளிதில் விளங்குவதற்காக, திருமூலர் அன்றாட அனுபவங்களிலிருந்து சிறந்த கற்பனையுடன் உருவகப்படுத்தியுள்ளார். திருமூலரின் இந்த அற்புத இலக்கிய படைப்பு பல நூற்றாண்டுகளாக அவர் வழிவரும் சித்தர்களின் உள்ளங்களைக் கவர்ந்துள்ளது. பின்னால் வந்த பல சித்தர்கள் மெய்ப்பொருளை விளக்க மறைமொழியை இதுபோன்று பரவலாக கையாண்டு வந்தார்கள். பல தடவைகள் படித்தாலும் தெவிட்டாத சூன்ய சம்பாஷணை பகுதியை முழுமையாக நாம் எல்லோரும் படித்து, சிந்தித்து, அதன் உண்மையை உணர்ந்து பயன்பெறுவோமாக.

(தொடர்ந்து வரும்)

# பாரதப் போரில் பார்த்தசாரதி



டாக்டர் த. அமிர்தலிங்கம்

## நூல் அறிமுகம் – 'நிறைமதி'

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : | டாக்டர் த. அமிர்தலிங்கம் |
| நூல்வெளியீடு | : | செவ்வேள் பதிப்பகம்,<br>B-3, தாடண்டர் நகர்,<br>வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு,<br>சைதை, சென்னை-15. |
| விலை | : | ரூ. 55 (ஐம்பத்தைந்து மட்டும்) |
| பக்கங்கள் | : | 448 |

''பாரதப் போரில் பார்த்தசாரதி'' எனனும் இந்நூல், திருக்கோயில் இதழில் அதன் ஆசிரியர் டாக்டர் ச. அமிர்தலிங்கம் அவர்கள் மூன்றாண்டுகளுக்கு மேல் தொடர்க் கட்டுரைகளாக எழுதி வந்த செஞ்சொற் காவியமாகும்.

கட்டுரைத் தொடராக வெளிவந்த போதே பல்லாயிரக்கணக்கான அன்பர்கள் ''பாரதப் போரில் பார்த்த சாரதி''யைப் படித்துப்பயன்துய்த்துப் பாராட்டியுள்ளார்கள்.

''மிகமிக அற்புதம், எங்களைப் பாரத காவியம் நடைபெற்ற மிகப் பழங்காலத்திற்கே உங்கள் கட்டுரைத் தொடர் அழைத்துச் சென்று விடுகிறது. எங்கள் உள்ளங்களில் பார்த்தசாரதியும், பார்த்தனும், பார்த்தன் மகன் வீரஅபிமன்யுவும், வீமனும், வீரகடோற்கஜனும், வீடுமரும், விதுரரும், கர்ணனும், செஞ்சோற்றுக் கடனுக்காகத் தன்னையே தியாகம் செய்யும் தானசூர கர்ணனும் நீங்காத இடம் பெற்றுவிட்டனர். அபிமன்யு வீரப்போர் ஆற்றும் பதின்மூன்றாம் போர்ச் சருக்கமும், சயத்திரதனைப் பார்த்தன் பழிக்குடழிவாங்கும் பதினான்காம் போர்ச் சருக்கமும் ஆயிரம் முறை படித்தாலும் திகட்டாத அற்புதக் காவியம். தொடர்கட்டுரைகளைத் தொகுத்து நூல் வடிவில் பார்க்கவும், படிக்கவும், பாதுகாத்து வைக்கவும் பேராவலாய் உள்ளோம். உடன் நூலாக்கித் தாருங்கள்'' என்று பலப்பல வாசகர்கள் வேண்டிக் கொண்டதற்கு இணங்க இந்நூலை அச்சிட்டு வெளியிட்டுள்ளனர் செவ்வேள் பதிப்பகத்தார்.

கிருட்டிணன் தூது என்ற நயமான பகுதியிலிருந்து வில்லிபாரதக் காவியத்தை நூலாசிரியர் ஆரம்பித்திருக்கின்றார் என்ற போதும், மகாபாரதக் கதை முழுவதையும் ஆங்காங்கே பின்னணி (FLASH BACK) உத்தி முறையில் கூறியிருக்கும் சிறப்பு பாராட்டுமாறு அமைந்துள்ளது. வில்லிப்புத்தூர் ஆழ்வார் எவ்வாறு தம் உளந்தோய்ந்து மகாபாரதக் காவியத்தை ஆற்றுநடையில் கவிதைகளாக வடித்தாரோ அதைப் போலவே நூலாசிரியரும் பாரதக் கதாபாத்திரங்களின் குணச்சித்திரங்களில் தோய்ந்து, உருகி, உளப்பூர்வமாக உணர்ந்து அந்த உணர்ச்சி சற்றும் குறையாமல், உணர்ச்சியும் எழுச்சியுமிக்க ஆற்றொழுக்கு நடையில் வில்லிப்புத்தூர் ஆழ்வாரின் உயிர்நிலைக் கவிதைகளுடன் இணைத்து இந்நூலை எழுதியிருப்பது பாராட்டிற்குரியது.

ஆசிரியரின் உணர்ச்சிமிக்க நடைக்கு ஒரு சான்று இங்கே காட்டலாம்.

''அபிமன்யு! வீரர்களுக்கெல்லாம் வீரனே! உனக்கு மாமன் திருமால். தந்தை வீர அர்ச்சுனன். உன் பாட்டன் தேவர்களுக்கெல்லாம் தலைவனாகிய இந்திரன். உனக்கு உறவு ஒருவர் இருவர் அல்ல. ஒரு கோடிக்கு மேற்பட்ட மகுடம் தாங்கிய மன்னர்கள். இவ்வளவு பேர் இருந்தும் உனக்குத் துணையாக உன்னைக் காப்பதற்கு ஒருவர்கூட இன்றைக்கு இந்தக் களத்தில் வரவில்லையே! இதைத் தானா விதி— விதியின் கொடுமை என்று கூறுவது!''

''ஆதிசேடன் நடுங்க விரைந்து நீ செலுத்திய உன் செம்பொன்தேர் அழிந்தபோது உனக்கு ஒருவரேனும் துணைவந்தார்களா? வாள்பிடித்த உன்மணி வலக்கையை மாற்றார் அறுத்து வீழ்த்திய போதேனும் உனக்குத் துணையாக ஒருவரேனும் வந்தார்களா? உன்னுடைய புன்னகை பொலியும் வீரமுகத்தைச் சயத்திரதனின் கதாயுதம் வீழ்த்திட முற்பட்ட வேளையில் உன்

பாட்டன், மாமன், வீரவீமன், உன் பிரிய தந்தை, உன் பெரிய தந்தை, சிறியதந்தை யார், மற்றைய உறவுமார் இவர்களில் ஒருவராவது உனக்குத்துணைசெய்தார்களா? ஆறுதலாகவாவது சில அன்பு வார்த்தைகளைக் கூறினார்களா? இல்லையே அபிமன்யு! இல்லையே!''

''முருகனையும் விட வலிமை வாய்ந்த உன்னுடன் நேர் நின்று முகங்கொடுத்துப் போர் செய்ய ஆற்றல் இல்லாத கோழைகள் பலரும் சேர்ந்தல்லவா உன்னைக் கொன்று விட்டார்கள்! இது அவர்களுக்கு வெற்றியா? இல்லை அபிமன்யு இல்லை. உன் மரணமும்கூட உனக்கு வெற்றியாகவே முடிந்திருக்கிறது.''

(பக் 253—254)

தானங்களில் சிறந்த தானம் சமாதானமே என்பதை வற்புறுத்தும் காவியம்தான் மகாபாரதக் காவியம் என்பதை இந்நூல் மூலம் தெளிவுபடுத்துகிறார் நூலாசிரியர் டாக்டர் த. அமிர்தலிங்கம், பதினெட்டாம் நாள்போர். தன் பக்கம் இருந்த 7 அக்குரோணி சேனைகளையும், 99 தம்பிகளையும், பிரிய ஆருயிர் நண்பனையும் இழந்து, ஏற ஒரு வாகனமும் இன்றித் தனியாளாகத் தன் கையில் ஒரு கதாயுதத்துடன் மட்டுமே நிற்கிறான் துரியோதனன். யானை, குதிரை, தேர் என்னும் மூன்று வகையான வாகனங்களும் படைகளும் புடை சூழ, தம்பியர் ஒருவரும் அழிவின்றித் தருமர் அவ்விறுதி நாளிலும் வீற்றிருக்கும் சிறப்பு கண்டு பொறாமைத் தீயால் பொசுங்குகின்றான் துரியோதனன்.

தீய துரியோதனனின் அதரும உள்ளத்தையும், தூய தருமரின் தரும உள்ளத்தையும் இங்குச் சித்தரித்துக் காட்டவரும் நூலாசிரியர்

''விதிகூட தன் விதி வழி நடக்க வேண்டுமென்று அறம் நோக்காது அடம்பிடித்த துரியோதனனுக்குத் தருமம் தந்த மிகப்பெரிய தண்டனையைப் பார்த்தீர்கள் அல்லவா! நாம் யாரைப் பின்பற்றக் கூடாது என்பதற்குத் துரியோதனன் எடுத்துக் காட்டு, நாம் யாரைப் பின்பற்ற வேண்டும் என்பதற்குத் தருமரே எடுத்துக் காட்டு, தருமரைக் கண்டு துரியோதனன் பொறாமை கொள்ள, தருமரோ துரியோதனன் மேல் பரிவும் கருணையும் கொண்டு தாம் தம் தேரிலிருந்து இறங்கி நடந்து அவனருகில் செல்கிறார். ''தம்பி துரியோதனா! நீயே இவ்வுலகை எல்லாம் ஆண்டுகொள். நானும் என் தம்பிகளும் நீ இடும் பணிகளைச் செய்ய சித்தமாய் இருக்கிறோம். நாம் ஒற்றுமையாக வாழ்ந்து குருகுலத்திற்குப் பெருமை சேர்ப்போம். நீ சம்மதம் என்று ஒரு வார்த்தை சொல் போதும். பரந்த இந்த இராஜ்ஜியம் அனைத்தையும் உனக்கே உரிமையாக்குகிறேன்' என்று இனிமையான மொழிகளைக் கூறுகிறார் தருமத்தின் வடிவமான தருமர் '' (பக்: 424) என்று தருமரின் குணச்சித்திரத்தை வடித்துக் காட்டுவது நம் உள்ளங்களை நெகிழவைக்கும் ஒன்றாகும். பாரதப்போருக்குப் பிறகு துரோபதை தன் சபதப்படி துரியோதனன், துச்சாதனன் குருதியைப் பூசி அவிழ்ந்திருக்கும் தன் கூந்தலை அள்ளி முடித்தாளே ஆமாகில் அதை ஏன் வில்லிப்புத்தூரார் தம் காவியத்தில் விவரித்துப் பாடவில்லை என்ற ஒரு வினாவையும் கேட்டு, அதற்கான விடையையும் நூலாசிரியர் ஆய்ந்து கூறியிருப்பது சமாதானமே மகாபாரதக் காவியம் உணர்த்தும் ஒப்பற்ற அறம் என்பதைத் தெளிவுபடுத்தும் நயமான இறுதிப் பகுதியாகும்.

''அபிமன்யு, இராவான், கடோற்கஜன் ஆகிய பிரிய மைந்தர்கள் இறந்துபட்டபோதும் பாண்டவர்கள் அதை வீரத்தின் பரிசாகவே உணர்ந்தார்களே தவிர, அப்போதும்போரின் கொடுமையை அவர்கள் முற்றிலுமாகஉணர்ந்து கொள்ளவில்லை. போர் முடிந்த அந்தப் பதினெட்டாம் நாள் இரவு அநியாயமாக இளம் பஞ்ச பாண்டவர்களின் மரணத்தைச் சந்திக்க நேர்கிற போதுதான் பகையுணர்ச்சி, பழியுணர்ச்சி ஆகியவற்றைத் தூபம் போட்டு வளர்ப்பதான போரின் கொடுமையை அவர்கள் முற்றிலுமாக உணர்கிறார்கள். அதனால் தான் பகையுணர்ச்சியை-பழியுணர்ச்சியை உண்டாக்கிப் போருக்கும், சமுதாயக் கேட்டிற்கும் காரணமாகும் சபத நிறைவேற்றம் முதலியவைகளைப் பொதுபடுத்திப் பேசக்கூடாது என்பதனால் வில்லிப்புத்தூரார் துரோபதை தன் கூந்தலினை சிக்கெடுத்தாள் - முடித்தாள் போன்ற பாஞ்சாலி சபதம் நிறைவேறிய பகுதிகளை விவரிக்கவில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பாரதப்போர் முடிந்த நாளில் பாண்டவர்களும், துரோபதையும்கூட தாங்கள் உற்ற பேரிழப்புகளால் தங்கள் சபதத்தைப் பற்றி நினைக்கவோ அல்லதுஅதைப் பெருமைபடுத்திப் பேசவோ இயலாத பேரிழப்பிற்கு ஆளாகிப் போர்க்களம் அவர்களுக்குக் கற்றுத் தந்த போதனையை அவர்களும் செவ்வனே உணர்ந்து கொண்டு விடுகிறார்கள். இவ்வாறு மகாபாரதக் காவியம் சூது போரின் தீமையை மட்டுமல்ல, மோது போரின் தீமையையும் கூட இப்பேருலகிற்கு எடுத்துக்காட்டும் அற்புதப் பெருங் காவியமாகத் திகழ்கிறது' (பக். 444).

இவ்வாறு இப் ''பாரதப்போரில் பார்த்த சாரதி'' நூல் தருமம் வெல்லவும், தருமம் நிலைக்கவும், தருமம் தழைக்கவும், எல்லாம் வல்ல பார்த்தசாரதி பெருமானே திருவருள் புரிந்தார் - இனியும் புரிவார் என்பதை நயம் பட விரிவுபட 448 பக்கங்களில் எடுத்து விளக்கி எல்லோரும் விரும்பும்-பாராட்டும்-படித்துப் பயன் கொள்ளும் நன்னூலாகவும், பொன்னூலாகவும் திகழ்கின்றது என்றால் இவ் இதிகாச விரிவுரைக் காவியம் ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்க வேண்டியது இன்றியமையாத அவசியம் என்பது கூறாமலே விளங்கக் கூடிய உண்மையல்லவா! இந்நூலை வேண்டுவோர் செவ்வேள் பதிப்பகம், B-3, தாடண்டர் நகர், வீட்டுவசதி வாரியக் குடியிருப்பு, சைதை, சென்னை-600 015 என்ற முகவரிக்கு ரூபாய் 55 பணவிடை அனுப்பி நூலைப் பதிவுத்தபாலில் பெற்றுப் படித்துப் பயன்பெற வேண்டுகிறோம்.

# நம்நாட்டுச் சித்தர்கள்

**டாக்டர் இரா. மாணிக்கவாசகம்**
**தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பர் கல்லூரி, சென்னை.**

**''நம்நாட்டு சித்தர்கள்' எனும் சிறந்த தலைப்பில் நம் புண்ணிய பாரதத்தில் சிறப்புற்றிருந்த சித்தர்களின் சீரிய வரலாற்றைச் சுருக்கமான முறையில் விவரிக்கின்றார் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியரான டாக்டர் இரா. மாணிக்கவாசகம் அவர்கள். படித்து இன்புறுவோமாக:**

## 1. அகத்தியர்

திரு. அ. சாமிசிதம்பரனார் அவர்கள் தம்முடைய அகத்தியர் வரலாறு என்ற நூலில் சுமார் 37 அகத்தியர்கள் பல்வேறு காலங்களில் இருந்ததாகக் குறித்துள்ளார். இவ்வளவு அகத்தியர் பற்றிய குறிப்புக்களையும், அவர்களுக்குரிய காலங்களையும், எந்த வரலாற்று அடிப்படையில் தொகுக்கப் பெற்றன என எந்தவிதச் சான்றும் காட்டவில்லை என்பது குறிக்கத்தக்கது.

அறிஞர் சுத்தானந்த பாரதி அவர்கள் மூன்றுக்கும் மேற்பட்ட அகத்தியர்கள் பல்வேறு காலங்களில் வாழ்ந்து பல்வேறு இலக்கியங்களை இயற்றியுள்ளனர் எனக் குறிக்கின்றார்.

ஏறக்குறைய இதே கருத்தைத் திரு ரா. ராகவையங்கார் அவர்களும் கூறுகின்றார். இங்ஙனம் அறிஞர்கள் பலரும் கூறுவது கொண்டும், அகத்தியர் பெயர் தாங்கிய நூல்கள் கொண்டும் ஆராயின் அகத்தியர் என்ற பெயருடன் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இருந்திருத்தல் கூடும் என்பது உறுதியாகின்றது.

அகத்தியர் பிரமன் செய்த கும்பத்தில் தோன்றியவர் என்பதும்; மித்திரன் ஊர்வசி மேல் மோகம் கொண்டு, வீர்யத்தைக் கும்பத்திலிடத் தோன்றியவர் என்பதும்; புலத்திய முனிவரின் சகோதரியாகிய லோபா முத்திரை என்பவளை மணந்தவர்' என்பதும்; சிவன் திருமணத்தின் போது தெற்கே அனுப்பப்பட்டவர் என்பதும்; வில்வலன், வாதாபி என்னும் அரக்கர்களைக் கொன்றவர் என்பதும்; இன்னும் இவை போல்வன பலவும் பிற்காலத்தில் எழுந்த கதைகளாக இருக்கலாம்.

பல அகத்தியர் பற்றிய கருத்துக்கள் ஒன்றாகச் சேர்ந்து ஒரே அகத்தியருக்குச் சேர்ந்த சிறப்பாகத் தோற்றமளித்து மயக்குகின்றன. எது உண்மை, எது பொய், எந்தச் சிறப்பு எந்த அகத்தியரைச் சாரும் என்பதும், விளங்க முடியாத அளவு அனைத்தும் கலந்து விட்டன.

'தட்சணாமூர்த்தி குருமுகம் நூறு' என்ற நூலின் மூலம் அகத்தியருக்குத் தட்சிணாமூர்த்தி என்ற பெயரும் உண்டு என்பது தெரிகின்றது. சென்னையில் உள்ள கீழ் நாட்டுக் கையெழுத்துப் பிரதி நூலகம் தயாரித்துள்ள பட்டியலில் அகத்தியர் பெயரில் சுமார் 96 நூல்கள் காணப் பெறுகின்றன. பெருந்திரட்டு, ஆயுள்வேத பாஷ்யம், விதிநூல் மூவகைக் காண்டம், வைத்திய சிகாமணி, செந்தூரம் 300, மணி 400, சிவஜாலம், சக்திஜாலம், சண்முகஜாலப் வைத்தியக் கண்ணாடி, வைத்தியம் 1,500, வைத்தியம் 1,600, வைத்தியரத்னாகரம், நாடி சாஸ்திரம், கரிசல பஸ்பம் 200 அகஸ்தியர் சித்த வைத்தியம், ஆறெழுத்தந்தாதி, கர்ப்ப சூத்திரம், வாகடம், பூஜாவிதி, ரசவாத சூத்திரம் எட்டு, அகத்தியர் ஞானம் பன்னிரண்டு, வைத்தியக் கும்மி, நோயின் சாரம் செந்தூர முறை முதலிய சில இவர் பெயரில் காணப்படும் நூல்கள்.

சங்க காலத்தில் வாழ்ந்து தொல்காப்பியருக்கு ஆசிரியராக விளங்கி எழுத்து, சொல் பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணம் பாடியதாகக் கூறப்படும் அகத்தியரினும், இம் மருத்துவ நூல் பாடியவர் வேறானவராதல் வேண்டும். இவ்விருவகையான நூலையும் பாடியவர் ஒருவரே, என்ற கருத்துப் நிலவி வருகின்றது.

''ஆச்சப்பா இந்தமுறை பதினெண்பேரும்
அயன்மாலும்
அரனொடுந் தேவரெல்லாம்
மூச்சப்பா தெய்வமென்றேயறியச்சொன்னார்''

சேதியொன்று சொல்லுகிறேன் தெளிவாய்க்'
கேளு
செகத்தினிலே சியாமளா தேவிதன்னை''

மேற்காட்டிய இரு சான்றுகளும், மருத்துவ நூல் பாடிய அகத்தியரது ஆகும். சங்க காலத்தில் வாழ்ந்த அகத்தியர் நடையாகத் தோன்றவில்லை. எனவே, அகத்தியர் ஒன்றுக்கு மேற்பட்டவராய் இருத்தல் கூடும் என்பது தெளிவு.

## 2. அகப்பேய்

இவர் வேளாளர் குலத்தில் தோன்றியவர் என்பர். இவர் தம் மனத்தைப் பேயாக அலைதல் பற்றிப் பேயென உருவகப்படுத்தி அலையாது நிற்க என அறிவுரை கூறிப் பாடியதால் இப்பெயர் பெற்றார் எனக் கருதலாம். இவரது பாடல்களின் இறுதியில் அகப்பேய்



என்னும் சொல் முடிவு காணப் பெறுகின்றது. சங்க காலத்தில் பாடிய பாடல் காரணமாகக் குப்பைக் கோழியார், காக்கைப் பாடினியார், செம்புலப்பெயல் நீரார், தேய்புரிப்பழங் கயிற்றியார் எனப்பெயர் பெற்றது போல இவரும் பாடல் மூலமாகப் பெயர் பெற்றவரேயாதலின் இவரது இயற்பெயர் அறிய முடியவில்லை. மற்ற சித்தர்களைப் போல இவரும் மறை பொருள் சொற்களைக் கொண்ட பாடல்கள் பலவற்றைப் பாடியுள்ளார்.

'தன்னை யறியவேணும் அகப்பேய்
சாராமற் சாரவேணும்
பின்னை யறிவதெலாம் அகப்பேய்
பேயறி வாகுமடி
தானற நின்றவிடம் அகப்பேய்
சைவம் கண்டாயே''
'சைவம் ஆருக்கடிஅகப்பேய்
தன்மை யறிந்தவர்க்கே'

என்வரும் அடிகள் இவரது பாடலில் பொதிந்துள்ள உயர்கொள்கையாகும்.

சித்தர் ஞானக்கோவையில் இவர் பெயரில் காணப்படும் 100 பாடல்களைத் தவிர வேறு தனி நூல்கள் காணப் பெறவில்லை.

### 3. அழுகணி

இவரது குரலில் உள்ள கோளாறு காரணமாகமக்கள். இவரை இப் பெயரிட்டு அழைத்திருக்கலாம் என்பர். இவரது பாடல்களில் எல்லாம் இரங்கி வருந்திப் பாடுவதாக-அழுது பாடுவதாக அமைந்திருக்கும் காரணத்தினாலும் இவ்வாறு குறிக்கப்பட்டிருக்கலாம்.

''ஊற்றைச் சடலமடி உப்பிருந்த பாண்டமடி
மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டுதில்லை
மாற்றிப் பிறக்க மருந்தெனக்குக் கிட்டு
மென்றால்
ஊற்றைச் சடலம்விட்டே என்கண்ணம்மா
உன்பாதம் சேரேனோ'

இது ஒரு சான்று,

'வெளியினி லொளியாய் வந்துமிக்கதோ
ரழுகண்ணர்தான்
அழுதபாவனை யினோடு கண்ணில்நீ ராறாய்த்
தோன்றப்
பழுதிலாக் கார்க்காட் டான்றன் பாலனாய்ப்
பிறந்து வந்து
அழுகண்ணிச் சித்த ரென்று அருளுடன்
போட்டாரே'

—கருவூரார் வாத காவியம் 700

எனவரும் பாடல் மூலம் அழுகின்ற கண்களை உடையவராய் விளங்கியவர் என்ற கருத்தும் புலனாகின்றது. இதே' பாடல் அகஸ்தியர் வைத்திய ரத்ன சுருக்கம் 360 என்னும் நூலிலும் உள்ளது

(தொடர்ந்து காண்போம்)




க. குழந்தை வேலன், எம்.ஏ.,
பதிவு அலுவலர்,
தொல்பொருள் ஆய்வுத் துறை சிதம்பரம்.

மாடு என்றால் செல்வம் என்று பொருள். பண்டைய மக்களின் வாழ்க்கையில் மாடுகளே பெரும் செல்வமாகக் கருதப்பட்டது. அவை உலகு புரந்தூட்டும் ஒப்பற்ற தாயாக - ஏன் தெய்வமாகக் கூடக் கருதப்பட்டதுண்டு.

மாடுகளின் ஏற்றம் பற்றியும், அவைகள் இறைவன் முதல் ஏழைவரை எப்படிப் பயன் பட்டன என்பது பற்றியும் கேட்டதை விட ஏட்டில் படித்ததே ஏராளம். பல்லவர், பாண்டியர், சோழர் மற்றும் தம் பெயர் வரலாற்றில் இடம் பெற்ற எல்லா அரசர்களின காலங்களிலும் மாடுகள் தெய்வங்களாகப் போற்றப் பட்டனவோ அல்லவோ அறியோம். ஆனால் படமாடக் கோயில் பரமன் முதல், நடமாடும் கோயில்களான நம்பர் வரை எல்லார்க்கும் இன்றியமையாச் செல்வங்கள் அவை என்பதில் ஐயமில்லை.

ஒளி வடிவினராகிய இறையவர் இல்லங்களுக்கும் (கோயில்) ஒளிசெய்ய விளக்குகள் தேவைப்பட்டன. அவ்விளக்குகள் எரிய அரசர்களும் அரசமாதேவியரும், ஆளும் அதிகாரிகளும் குடி மக்களும் கால் விளக்கு, அரை விளக்கு, ஒரு விளக்கு, இருவிளக்கு என தத்தம் தகுதிக்கேற்ப நெய் வார்த்தனர். ஒரு ஆண்டுக்கு ஒரு விளக்கெரிக்க எவ்வளவு நெய் தேவை எனக் கணக்கிட்டனர், பல காலங்களில் வழங்கி வந்த அளவுகளை நோக்கில் ஒரு விளக்கெரிக்க நாள் ஒன்றுக்கு உழக்கு நெய் தேவைப்பட்டுள்ளது. இஃது ஆண்டு முழுதும் வழங்கப்படல் வேண்டும். அதற்கு ஆடாக இருப்பின் 96 ஆடுகளும், மாடாக இருப்பின் 48 மாடுகளும் எருமையாக இருப்பின் 24 எருமைகளும் கோயிலுக்கென வழங்கப்பட்டன.

எல்லோராலும், ஒரு விளக்குக்கு வேண்டிய ஆடு, மாடுகளை வழங்க இயலாதன்றோ! எல்லோரும் பங்கு கொள்ளும் வகையில் வலியாரும் மெலியாரும் தங்களால் இயன்றவாறு ஒரு விளக்குக்கு ஆடு, மாடு, எருமைகள் முறையே 96, 48, 24-உம், அரை விளக்குக்கு 48, 24, 12உம் கால் விளக்குக்கு 24, 12, 6-உம் கொடையாக அளித்துள்ளனர். இதில்கூட ஒரு கூட்டு முயற்சி, ஊர்கூடித் தேரிழுக்கும் கூட்டுப் பண்பு இருந்திருப்பதைக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன.

ஆட்டையும் மாட்டையும் வழங்கிவிட்டால் அவை தானாக நெய்கொடுக்குமா? மேய்ப்பது யார்? கறப்பது யார்? அந்த வினாவுக்கும் ஒன்றை ஒன்று சார்ந்துள்ள அக்காலக் குமுகாய அமைப்பே விடையாக உள்ளது. கோயில்களுக்கு வழங்கப்படுகின்ற கால் நடைகளை மேய்த்துத் தவறாமல் (முட்டாமல்) நெய் வழங்கும் குடிகள் இருந்தன. அவர்கள் மன்றாடிகள் எனப்பட்டனர். அவர்களிலும் கோயில் மன்றாடிகள், ஊர் மன்றாடிகள் என இரு பிரிவினர் சில கோவில்களில் மட்டுமே கோயிலுக்கென காணி உடைய மன்றாடிக் குடிகள் இருந்துள்ளனர். இவர்களே கோயிலுக்களிக்கப்பட்ட கால்நடைகளைப் பொறுப்பேற்று மேய்த்து நெய்யளந்தனர்.

மன்றாடிக்குடிகள் கோயில் கால்நடைகளை மேய்த்து நெய்யளந்தால் அவர்களுக்குப் படி அளப்பது யார்? அவர்களுக்கு அவர்களே ஆண்டைகள். இவர்களுக்கு அளிக்கப்படுகின்ற ஆடு மாடுகள் எப்பொழுதும் கொடுக்கப்பட்ட எண்ணிக்கை குறையாமல், தவறாமல் பால் கொடுக்கின்ற நல்ல தகுதிஉடையனவாக இருத்தல் வேண்டும் என்பது விதி.

இறப்பினாலோ, முதுமையினாலோ எண்ணிக்கையோ நெய் அளவோ குறையக் கூடாது. அதனால் இவை சாவா மூவாப் பேராடு-பெருமாடு எனப் பெயர் பெற்றன. தரமானவை, என்றும் இளமையானவை (மூவா) ஆகையால் ஆண்டுதோறும் ஈனும் கன்றுகளும், அளவுக்கு அதிகமாகக் கறக்கும் பால் பொருள்களும் அவர்களுக்கு வருவாய் ஆகி அவர்களையும் வாழ வைத்தது.

இதனை ஒரு வகையில் சார்பு குமுகாயம் அல்லது கூட்டுக் குமுகாயம் எனலாம். கொடையளிப்போர், பயன் பெறும் கோயில், கோயிலுக்காக மாடுகளை மேய வளர்ப்போர், அவர்களது வாழ்க்கைத் தேவை நிறைவு இப்படி ஒன்றை ஒன்று தழுவி நிற்கும் தொடர்உறவுகள் அவர்களது கூட்டு வாழ்வைக் கெட்டு விடாமல் காத்தன.

பழைய முறைகள் சிதைந்து விட்ட இக்காலத்தும் அம்மரபின் எச்சங்களாகப் பக்தி அடிப்படையில் கோயில்களுக்கு ஆடுகளும் மாடுகளும் ஏன் சேவல்களும் வேண்டுதல் என்ற பெயரில் விடப்படுகின்றன. ஆனால் பழைய நோக்கமோ, எண்ணிக்கையோ இல்லை. நோக்கங்கள் மறைந்து வெறும் மரபாகக் கடைப்பிடிக்கப்படும் இத்தகைய கொடையால் வந்த ஆடு மாடுகள் பேணுவாரற்று கண்ட கழனிகளிலும் கடைகளிலும் புகுந்து மொத்துண்டும், யாருக்கும் பயன்படாமல், பல வகைகளில் இடையூறாகத் திரிவதால் ஏச்சுக்கும் உவமைக்கும் ஆளாகின்றன.

# கீதைக் குறள்கள்



அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்

## பக்தியின் சிறப்பும் செய்முறையும்

(குறிப்பு:—'தியான யோகம் பக்தியோகம் ஆகிய இரண்டினுள் சிறந்தது எது?' என்பதை அருச்சுனன் அறிய விரும்பு கிறான்) (12[1)

ஒன்றும் மனத்துடன் குன்றா உறுதியாய்
என்னையே போற்றல் உயர்வு (12[2)

எங்குமாய் சித்தனைக்கு எட்டா அழிவிலா
பங்கமற்ற பிர்மத்தை நன்கு (12[3)

மனங்கொண்டு ஐம்புலன் வன்மை அடக்கி
அனவரதம் பல்லுயிர் கள் ( ,, )

உற்றிடும் துன்பம் உணர்ந்து, உறுதியுடன்
பற்றின்றி கோடாது நின்று, (12[4)

சலனமற்ற திண்மனத்தால் தக்கவகை போற்றின்
நலன்பெறுவர் என்னை அடைந்து. ( ,, )

பரம்பொருளை ஒருருவில் பார்த்து வணங்கிப்
பரவுதலே மிக்க எளிது. (12[5)

அருவமாய் எண்ணி வழிபடுதல் அல்லல்
தருவதோர் மார்க்கமெனக் கொள். ( ,, )

என்னையே நம்பி எதனைச் செய்தாலும்
என்தனுக்கே அர்ப்பணிப்போர், தம் (12[6)

சித்தத்தை என்பால் திடமாக வைத்திடுவோர்
சித்தி பெறுதல் எளிது. (12[7)

மனம்புத்தி என்னிடம் மாறாதுவைத்திடுவோர்
என்னை அடைவர் இனிது. (12[8)

சித்தத்தை என்பால் செலுத்தல் கடினமெனில்
நித்தப் பயிற்சியால் மாற்று. (12[9)

பயிற்சியில் தோல்வியுற்றால் பார்த்திப! அர்ப்பணி
இயலாதா யின் சரண டைவாய் எனையே (12[11)

செய்தொழில் சேர்பயன் அத்தனையும் பற்றின்றி
செய்திடுக நேர்மையாய் நன்று. ( ,, )

ஞானமே யோகத்தும் நன்றாம்; தியானம்
ஞானத்தின் மேலாம் மற்று. (12[12)

தியானத்தும் மேலா பயன்கருதாச் செய்கை;
தியாகவுணர் சக்தி தரும்.

வெறுப்பின்றி நட்பு கருணை மிகுந்து
பொறுமையுடன் பற்றையும் விட்டு (12[13)

இன்பதுன் பம்சமம் என்று மனநிறைவால்
தன்னடக்கம் கொள்வ துடன். ( ,, )

திடமாக என்பால் மனபுத்தி சீராய்
அடக்கிடுவோன் என்பக்த னாம்... (12[14)

உலகால் வருந்தா உலகை வருத்தா
நலமுடை இன்பவாழ் வில் (12[15)

சின(ம்) அச்சம் மற்றும் பொறாமை செற்ற
குணமுடையோன் அன்பன் எனக்கு. ( ,, )

விருப்பம் இலான்வீரன், தூய்மை விரும்பி,
இருமையாம் இன்பதுன் பம். (12[16)

சாராதான், ஆங்காரம் சற்றுமிலான், கர்மபயன்
பாரான் இனியன் எனக்கு. ( ,, )

இன்பமும் துன்பமும் இன்றி பகையாது
புண்ணிய பாவம் துறந்து (12[17)

விருப்பமற்று, வெப்பம்தண் மைபகை நட்பும்
தரும்நன்மை தீமைகளும் மற்று. ( ,, )

அவமானம் மானம் அடர்த்துவந் தாலும்
துவளாது வாழ்வ துடன் (12[18)

திடபுத் தியுடன்ஆன் மாவே குறியாய்
உடையோன் இனியன் எனக்கு.

என்று(ம்)அழி யாஇத் தருபத்தில் நம்பிக்கை
கொண்டோர் இனியர் எனக்கு. (12[20)

(தொடர்ந்து வரும்)

# மருதமலை மாமணியே முருகய்யா!

ஜி. பக்கிரிசாமி, பி.எஸ்.சி பி.எல
துணை ஆணையர், செயல் அலுவலர்
அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்,
மருதமலை.

## மருதமலை-பழமையின் பெருமை

கோவை மாவட்டத்தில் அமைந்துள்ள இந்து சமயக் கோயில்களில் எல்லாம் மிகப் புகழ் பெற்றது மருதமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் ஆகும்.

அறுபடைவீடுகளைக் கொண்டு, குன்றுதோறாடும் குமரவேள் எழுந்தருளியிருக்கும் இம்மருதமலையை ஏழாவது படைவீடு என்று முருக பக்தர்கள் போற்றி வழிபட்டு வருகின்றனர்.

கோவை மாநகரின் மேற்கே சுமார் 15 கி.மீ. தொலைவில், மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது. எழில் கொஞ்சும் இயற்கைச் சூழலில் விளங்குப் மருதமலை, முப்புறங்களிலும் மலையரண்களால் சூழப் பெற்றுள்ளது. திருக்கோயிலுக்குப பின்புறம் அமைந்துள்ள மலைகளின் இயற்கையமைப்போடு சேர்த்துக் காண்கையில் மயில்தோகை விரித்தாற்போல் காட்சியளிக்கிறது. இதனால் முருகன் மயில்மீதமர்ந்த தோற்றம் நம் கண்முன் வருகிறது.

மருதமரங்கள் மிகுதியாகக் காணப்படுவதால் இம்மலை மருதமலை என வழங்கப்படுகிறது. இம்மலை, மருதமால்வரை, மருதவரை மருதவெற்பு, மருதக்குன்று, மருதலோங்கல், கமற்பிறங்கு, மருதாசலம், வேள் வரை என்றெல்லாம் பேரூர்ப் புராணத்தில் குறிக்கப்படுகிறது.

மருதமலை ஆண்டவன் என்று அழைக்கப்படுவதற்குக் காரணம், மருதமரங்கள் நிறைந்த மலைக்குத் தலைவன் என்பதாகும். மருதமலையான், மருதப்பன், மருதாசலமூர்த்தி போன்ற திருப்பெயர்களாலும் இம்மலையில் எழுந்தருளியுள்ள முருகன் அழைக்கப் பெறுகிறார்.

## கல்வெட்டுச் சான்றுகள்

மருதாசலம், மருதன் போன்ற பெயர்கள் கி.பி. 12-ஆம் நூற்றாண்டிலேயே வழக்கில்



இருந்தன என்பதற்குச் சில கல்வெட்டுக்கள் சான்றாயுள்ளன. கோவையிலிருந்து சுமார் 25 மைல்கல் தொலைவில் உள்ள அவினாசி, திருமுருகன் பூண்டி ஆகிய ஸ்தலங்களில் உள்ள கோயில்களில் சில கல்வெட்டுக்கள் உள்ளன. திருமுருகன் பூண்டியில், முருகநாதர் திருக்கோயில் கர்ப்பக்கிரகத்து வெளிச்சுவற்றில் இரண்டு கல்வெட்டுகள் உள்ளன. அதில் பின் வருமாறு அமைந்துள்ளது.

(1) ''ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவருக்கு யாண்டு எட்டாவது பெருமாள் சாமந்தரில் மருதமலையனான குலோத்துங்க சோழ விக்ரமாதித்த தேவனேன், ஆளுடைய திருமுருகன் பூண்டி யாண்டார்க்குச் சந்தியா தீபம் ஒன்றுக்கு ஒடுக்கின பழஞ்சலாகை அச்சு ஒன்றின் உபயங்கொண்டு சந்தியாதீபம் ஒன்று சந்திராதித்த வரை செல்வதாக''

(2) அவினாசி ஆலயச் சாசனம் ஒன்றில் வீரராஜேந்திரன் (கி.பி. 1207-1255) காலத்தில் மருதன்முதலி வணிகச் சக்கரவர்த்தி என்ற பேரூர் நாட்டு முட்டத்து வியாபாரி ஒருவன் இருந்தான் என்றும் காண்பதால் மருதமலையான் என்னும் பெயர் வழக்கில் இருந்ததாக அறியலாகும். எனவே இன்றைக்கு சுமார் எழுநூறு ஆண்டுகளுக்கு முன்பாகவே மருதமலை புகழ் பெற்றிருக்கிறது.


மருதமலை என்னும் பெயர் பெற்றமைக்குக் கீழ்வரும் செய்தியையும் கூறும் வழக்கமுண்டு:

முருகபக்தரான சித்தர் ஒருவர் இம்மலைப் பகுதியில் வருகையில் அதிக தாகத்தாலும் களைப்பாலும் துன்புற்று மருதமரமொன்றின் நிழலில் இளைப்பாறினார். அம்மரத்தினடியில் இருந்து ஊற்று நீர் பீறிட்டுக் கிளம்பியது. இவ் வதிசயம் கண்டசித்தர் அகமகிழ்ந்தார். முருகன் திருவருளே அதற்குக் காரணம் என்று மகிழ்ந்த சித்தர் முருகப்பெருமானை 'மருதம்'-சலம் (நீர்) ஆகியவற்றின் தலைவா' என வாழ்த்திப் பாடினார். அதுவே காலப்போக்கில் மருதா சலபதி என மருவி அழைக்கப்படுகிறது என்பர்.

அசலம் என்ற வட சொல்லுக்குத் தமிழில் மலை எனபது பொருளாகும். எனவே மருத மரங்கள் அடர்ந்த மலை என்ற பொருளில் மருதாசலம் என்று பெயர் ஏற்பட்டது என்று கருதலாம்.

எனவே கி.பி. 12-ஆம் நூற்றாண்டில் மருதமலைத் திருக்கோயில் அமைக்கப்பட்ட தென்றும், கொங்கு நாட்டின் 24 பிரிவுகளுள் ஒன்றான ஆறைநாட்டின் எல்லையாக மருத மலை இருந்ததென்றும் அறியலாம்.

பேரூர்புராணம், காஞ்சிப்புராணம், அருண கிரிநாதரின் திருப்புகழ் முதலிய நூற்களில் மருதமலை சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.



பாம்பாட்டிச் சித்தர் குகை

## மருதமலையின் சிறப்பு

மருதமலையை மருந்து மலையெனக் கூறத்தக்க வகையில் மக்களின் உடற்பிணியும், மனப்பிணியும் நீக்கும் மூலிகைகளும் மரங்களும் உள்ளன. அருமையான காற்றும், அமைதி யான சூழலும் மனத்திற்கு மகிழ்ச்சியைத் தரு கின்றன. தவம் செய்வோர், அருளாளர்கள் இறப்பிலாப் பெருவாழ்வு அடைய காயகல்பம் தேடி இம்மலையில் வந்து தங்கினர். காமதேனு என்னும் தெய்வீகப்பசு இம்மலையில் பசி நீங்க மேய்ந்து மருத மரத்தின் கீழ் இருந்த நன்னீரைப் பருகியதாக மருதமலையின இயற்கை வளத்தைப் பேரூர் புராணத்தில் கச்சியப்ப முனிவர்.

'பக்தர் கோமுனி பட்டி முனிவரை
நித்த நித்த நிரந்தரத் துள்ளது.
சித்தர் வானவர் திப்பிய மாதவர்
சுத்த யோகியர் சூழ்ந்த பரப்பிது
வைகலும் மல்லகரச் சாரல்
கருத்திகழ் காமதேனு வுற்றுவாவி உறுபசி
யிரதர மேய்ந்த
மருதத்திகழ் தீர்த்தம் பருகி நீள் சோலை மலர்
நிழலவுயிர்ப்பதுவே'

எனக் கூறினார்.

இறைவனிடம் 1008 அண்டங்களையும் 108 யுகங்கள் ஆளப்பெருவரம் பெற்ற சூர பன்மன் தன் தம்பியர்களான சிங்கமுகன், தாரகன் என்பவர்களின் துணையோடு தேவர் களுக்குச் சொல்லொணாக் கொடுமைகளைச் செய்தான். தேவர்கள் சூரபன்மனின் கொடு மையை தாங்க இயலாமல் முக்கட்பெருமானா கிய சிவபெருமானிடம் முறையிட்டனர். சிவ பெருமான் தேவர்களிடம் சூரபன்மன் முதலி யோரைக் கொல்ல குமரன் தோன்றும் வரை ஆதிபுரி எனப்படும் பேரூரில் தங்கியிருக்குமாறு ஆணையிட்டார். மருதமலை அங்கே உள்ளது எனக்கூறிய சிவபெருமான்

''முருகன் என்று மொய்கொள் மொய்ம்பினான்
உருகும் அன்பர்க் குதவி செய்யவே
பெருகு காமர்ப் பிறங்க லாயினான்
அருகின் வேலுமருத மாயதே''

என்று அதன் சிறப்பைத் திருவாய் மலர்ந்தருளி னார்.

பேரூரில் எழுந்தருளியிருக்கும் சிவபெரு மானை பூசித்து குசத்துவராசன் என்னும் அரசன் இரண்டு பெண் குழந்தைகளைப் பெற் றெடுத்தான். பின்னர் இறைவனின் ஆணைப் படி மருதமலையானை வழிபட்டு மகனைப் பெற்றான் என்பதைப் பேரூர் புராணத்தில்


''மருதமா வரையிடை வதியும் வேற்படை
முருகனை வழிபடின் முடிகொண்ட மன்னவ
பெருவிறல் மைந்தனைப் பெறுவை யல்லயின்
ஒருவிய கவலையின் உவந்து செல்கவே''

எனச் சிவபெருமான் ஆணையிட்டதாகக் கச்சி யப்ப முனிவர் கூறுகிறார்.

''கருதுவார்க்குக் களி தரவல்லது
பொருதுவார்க்கு புயவலி ஈவது
சுருதி நீள் முடி போல்வது
தூய்மையில் மருத வோங்கல்
வளத்தில் பெரியதே''

என்று கச்சியப்ப முனிவர் பேரூர் புராணத்தில் மருதவரைப்படலம் அபயப் படலத்தில் மருத மலையைக் குறித்து சிறப்பித்துக் கூறியுள்ளார்.

மலையடிவாரத்திலிருந்து உச்சிவரை பக்தி வெள்ளம் பெருகி வரப் படியிலேறி வரும் பக்தர்கள் இளைப்பாற ஆங்காங்கே எழில்மிகு மண்டபங்கள் எழுப்பப்பட்டுள்ளன. இது வாழையடி வாழையென வரும் முருகனடியார் களுக்கு வரப்பிரசாதமாகும்.



கோயிலுக்குச் செல்லும் படிகள்.

## தான்தோன்றி விநாயகர் கோயில்

மலையடிவாரத்தில் படிக்கட்டுப் பாதையின் தொடக்கத்தில், தான் தோன்றி விநாயகர் கோயில் உள்ளது. இவ்விநாயகரின் இயற்கையமைப்பு மிக்க அழகுடையதாகவும், பிற தலங்களில் காண்பதற்கு அரியதாகவும் உள்ளது. இப்பெருமானின் சிறப்புக்களை

''மிக்க தமிழ்ப் புலவர் பலர் மேன்மேலும் போற்றிசைக்க
தக்க புகழ் மருதமலைத்தான்தோன்றிக் கணபதியே''

என மருதமலைத் தான்தோன்றிப் பதிகத்தில் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் கூறியுள்ளார்.

தான் தோன்றி விநாயகரை வணங்கிச் சென்றால் சரியாகப் 18 படிகளைக் கொண்ட பதினெட்டாம்படி உள்ளது. சபரிமலைக்குச் சென்று ஐயப்பனை வழிபட இயலாதவர்கள் இப்பதினெட்டாம்படிக்கு வந்து வழிபட்டுச் செல்வர்

## சிலையாய்ப்போன திருடர்கள்

பதினெட்டாம்படி கடந்து மேல் சென்றால் மலைச்சாரலில் மூன்று கற்கள் மாறுபட்ட நிறத்தோடு இருப்பதைக் காணலாம். இம்மூன்று கற்களும் சிலையாய்ப் போன திருடர்கள் என்பர். முருகனடியார்கள் கோயில் திருப்பணி நடந்தபோது பொன்னையும், பொருளையும் உண்டியலில் போட, இதைக் கண்ட மூன்று கள்வர்கள் ஒருநாள் இரவில் உண்டியலை உடைத்து பொன்னையும், பொருளையும் களவாடி மலைச்சரிவு வழியாகச் சென்றனர். முருகப் பெருமான் குதிரை வீரனைப் போல் சென்று அவர்களைப் பிடித்து ''நீவிர் கற்சிலைகளாகக் கடவீர்'' எனச் சபித்ததால் அம்மூன்று கள்வர்களும் கற்சிலைகளாக நிற்பதாகச் செவி வழிச் செய்தி கூறுகின்றது.

## இடும்பன் கோயில்

இடும்பன் கோயிலில் இடும்பனின் உருவம் உருண்டை வடிவமான பெரிய பாறையில் உள்ளது. காவடியைச் சுமந்து கொண்டிருக்கும் தோற்றத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. இடும்பனை வணங்கினால் குழந்தை பேறு கிடைக்குமாதலால் பக்தர்கள் இடும்பனை வணங்கிப் பயன் பெறுவர்.

## குதிரைக் குளம்படிகள்

இடும்பனை வணங்கிச் சற்று மேலே சென்றால் 'குதிரைக்குளம்பு' என்னும் சுவடு உள்ளது. அதற்காக எழில்மிகு மண்டபமொன்று அமைக்கப்பட்டுள்ளது. முருகவேள் சூரர்களை வெற்றி கொள்ளப் புறப்படும் போதோ அல்லது திரும்பி வரும்போதோ குதிரைக் குளம்புகள் பதிந்த இடமெனக் கருதப்படுகிறது. உண்டியல் பொருட்களைத் திருடர்கள் களவாடிச் செல்ல அவர்களை முருகப் பெருமான் தேடிச் சென்ற போது ஏற்பட்ட குதிரையின் குளம்படியாகவும் இருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

## ஆதிமூலஸ்தானம்

படி ஏறி மலையை அடைந்தால் நேரே இச்சந்நிதி உள்ளது. இங்குள்ள சந்நிதி அருவுருவத் திருமேனியாக லிங்க வடிவில் உள்ளது. வள்ளி தெய்வயானை சுப்பிரமணியர் மூவரும் லிங்க வடிவத்தில் காட்சி தருகின்றனர். முதலில் மூலஸ்தானமாகிய வள்ளி தெய்வயானையாருடனாகிய சுப்பிரமணிய சுவாமிக்கு இங்கு பூசை தொடங்கப் பெறும்.

கொங்கு வேளாளர்களில் ஆந்தை கூட்டம் என வழங்கும் ஆதன் தந்தை கூட்டத்தார் குல தெய்வமாகும்.

## மூலஸ்தான முருகன்

இயற்கையழகுமிகு மலைகளுக்கிடையில் இதயம் போல காட்சியளிக்கும் அழகிய மலைக் கோயிலாம் மருதமலை இதயத்தை ஈர்க்கிறது. பேரெழில் வாய்ந்த முருகப் பெருமானின் பேரழகைக் கச்சியப்ப முனிவர் 'ஆயிரங்கோடி காமர் அழகெல்லாம் திரண்டு எழுந்து மேயினு எனினும் செவ்வேள் விமலமாந் சரணந்தன்னில் தூய நல்லெழிலுக்கு ஆற்றாது என்றிடில் இனையதொல்லோன் மாயிரு வடிவிற்கெல்லாம் உவமையார் பகர வல்லார்' என்று பாடுவார். அதேபோல் இத்திருக்கோயிலில் மருதமலையான், சிரசில் கண்டிகையுடனும், பின்பக்கம் குடுமியுடனும், கோவணங்கொண்டு வலது திருக்கரத்தில ஞானத்தண்டேந்தி, இடது திருக்கரத்தை இடையில் அமைத்து வினைகளை வேரறுத்து யம பயம் தீர்த்து உண்மையறிவை அறியச் செய்யும் நீண்டவேலோடு உலகைக் காக்கும் மருதாசல மூர்த்தியாக பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்.

## முக்கிய தீர்த்தங்கள்:

''மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாய்த்
தொடங்கினார்க்கு
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும்
பராபரமே.''

என்று தாயுமானவ சுவாமிகள் குறிப்பிடுவது போல் மருதமலையானது மூர்த்தி, தலம், தீர்த்தம் என்னும் முக்சிறப்புகளையும் தன் கைத்தே கொண்டது.

மருதத்தீர்த்தம், கன்னி தீர்த்தம், கந்த தீர்த்தம் என்னும் தெய்வத்தன்மை மிக்க இம் மூன்று தீர்த்தங்கள் உள்ளன. இத்தீர்த்தங்களில் நீராடுவோர்க்குச் செல்வங்கள் பெருகும் எனவும், உடற்பிணி நீங்குமெனவும் திருத்துடிசைப்புராணம் கூறுகிறது.

## பாம்பாட்டி சித்தர் :

இறைவனை இடைவிடாது நினைந்து, நினைந்து அகக்கண்களால் கண்டு, ஆத்மசக்தியால் செயற்கரிய செயல்களைச் செய்பவர்கள் சித்தர்கள். பதினெண் சித்தர்களில் ஒருவரான பாம்பாட்டிச் சித்தர் பாண்டிய நாட்டில் காடுகளில் காணப்பட்ட பாம்புகளைப் பிடித்து ஆட்டியும், தம்சொற்படி நடக்கச் செய்தும் வந்தார். ஒருமுறை 'நவரத்னம்' என்னும் பாம்பை ஆட்ட முயற்சித்தபோது 'சட்ட முனிவரைச் சந்தித்து யோக நெறியில் சமாதி கூடும் நிலை பெற்றனராம்.

பாம்பாட்டிச் சித்தர் ஒருமுறை இறந்து போன மன்னன் உடலில் கூடுவிட்டுகூடுபாயும் வித்தை மூலம் புகுந்தாராம். இவ்வாறு பல சித்துக்களைச் செய்த இவர் இறந்த பாம்பை ஆட்டுவித்ததால் பாம்பாட்டிச் சித்தரென அழைக்கப்பட்டார். ஞானப்பாடல்கள் பல வற்றை பாடிய இவர் 'சித்தாரூடம்' என்னும் நூலையும் பாடினார். முருகப் பெருமான் பாம்பாட்டிச் சித்தரிடம் இம்மலையில் அருள் விளையாட்டுக்கள் செய்தார். ஒரு காலத்தில் உயரமான குன்று உருண்டோடிவர சித்தர் தம் அருட் சக்தியால் பாறையின் முகட்டிலேயே நிற்கும்படி செய்தார் என்பர்.


## பாம்பாட்டி சித்தர் குகை :

பாம்பாட்டி சிததருடைய கோயிலுக்கும் ஆதி மூலஸ்தானத்திற்கும் இடையே சுரங்க வழி உண்டு. அதன் வழியாகச் சித்தர் ஆதி மூலஸ்தானத்தில் உள்ள வள்ளி தெய்வானையுடன் அமர்ந்திருக்கும் முருகப் பெருமானை வழிபட்டார் என்பர். முருகன் அருள்பெற்று மக்களின் பிணி நீக்கி, சித்தர் மருதமலையிலேயே வீடு பேறு அடைந்தார். இவர் சமாதியான குகையில் ஒரு பாம்பு பாலும் பழமும் உண்டு செல்வதை இன்றும்காணலாம். பக்தர்கள் பாம்புக்கு நாளும் பாலும் பழமும் அளித்து வருகின்றனர்.

பாம்பாட்டி சித்தரை வழிபடும் அன்பர்களுக்கு நஞ்சினால் ஏற்படும்நோய்கள் நீங்கும். இச்சித்தரை வழிபட்டால் அமைதியின்றி வாழ்வோர் அமைதியான வாழ்க்கையைப் பெறுவர்.

## உச்சிப்பிள்ளையார் கோயில்

இத்தலத்திலிருந்து மலைமேல் வடக்கில் சுமார் 2 கி.ம. தொலைவில் உச்சிப்பிள்ளையார் அமர்ந்து அடியவர்களுக்கு அருள்பாலிக்கிறார். தற்போது சாயான உருவப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் செய்யப்பட்டு, ஒவ்வொரு சதுர்த்தியிலும் அபிஷேக பூஜைகள் செய்யப் பட்டு வருகின்றன. பக்தர்கள் தங்களுடைய துன்பங்கள் நீங்கி இன்பமானது இடைவிடாது பெருக, வினை தீர்க்கும் உச்சிப் பிள்ளையாரை வழிபட்டு வருகின்றனர்.



கோபுரத்தின் பக்கத் தோற்றம்.

பிரதான சந்நிதிக்கு வலதுபுறமாக உள் பிரகாரத்தில் அருள்மிகு பட்டீஸ்வரர் (பேரூரில் உள்ள பிரதானக் கடவுள்) சந்நிதியும், இடதுபுறம் அருள்மிகு மரகதாம்பிகை சந்நிதியும் (பேரூரில் உள்ள அம்மன் சந்நிதி) அமையப் பெற்றுள்ளது. ஆக பிரதான முருகன் சந்நிதி உமை மற்றும் மகேஸ்வரர் சந்நிதிகளுக்கு இடையே அமைந்துள்ள அமைப்பானது சோமாஸ்கந்த மூர்த்தம் என்ற சிறப்பான அமைப்பைப் பெற்றுள்ளது. அருள்மிகு மரகதாம்பிகை சந்நிதிக்கு எதிரே நவக்கிரகங்கள் சந்நிதியும் அமையப் பெற்றுள்ளது. மேலும் பிரதான சந்நிதிக்கு எதிரே உள்ள அலங்கார மண்டபத்தில் இடதுபுறமாக பெருமாள் சந்நிதியும் அமையப் பெற்றுள்ளது ஒரு சிறப்பு மிக்க அம்சமாகும். இது தவிர மருத தீர்த்தக் கரையில் சப்த கன்னிமார் கோயில் உள்ளது. இதன் காரணமாக இந்தத் தீர்த்தத்திற்கு கன்னி தீர்த்தம் என்றும் பெயர் வழங்கப்பட்டு வருகிறது.

## பஞ்ச விருட்சம் :

ஐந்து மரங்கள் ஒன்றாகப் பின்னிப் பிணைந்து வளர்ந்த அழகிய பழமையான மரம் ஒன்று ஆலயத்தின் தென்கிழக்கு மூலையில்

டிலுக்கு வெளியே உள்ளது. இந்த மரத்தடியில் விநாயகர் கோயில் ஒன்று உள்ளது. இம்மரத்தின் காற்று எல்லா பிணிகளையும் தீர்க்க வல்லது என்றும் இந்த மரத்தில் பல முனிவர்கள் இன்றும் கண்களுக்கு தெரியாமல் தவம் செய்து வருகிறார்கள் என்றும் கூறப்படுகிறது. இம்மரம் வேறு எங்கும் காணக்கிடைக்காத அபூர்வமான ஒன்றாகும். இந்த மரம் நெடுங்காலமாக உள்ளது. இதன் வயது கணக்கிட இயலவில்லை. இந்த மரத்தில் இணைந்த மரங்கள் பற்றி இந்த மலையில் புராதனமாக வாழும் இருளர்களிடம் கேட்டதில் இந்த மரத்தில் கொரக்கட்டை, இச்சி, ஆலமரம், வக்கணைமரம் மற்றும் ஒட்டுமரம் ஆகிய ஐந்து மரங்கள் தற்போது உள்ளன என்றும் முன்பு இதில் அரசமரம் ஒன்றும் இருந்தது என்றும் அது பட்டுப்போய்விட்டது என்றும் தெரிவிக்கின்றனர். சுமார் 75 வயது மதிக்கத் தக்க இருளர்களில் ஒருவரிடம் கேட்டதில் அவரது சிறு வயது முதலே இம்மரம் இதே நிலையில் உள்ளது எனறும் தெரிவிக்கிறார்.

## முக்கிய திருவிழாக்கள் ;

மூவர்க்கும் தேவர்க்கும் முதலாய் நின்ற முருகப்பெருமானுக்கு இம்மலையில் கிருத்திகை, ஆடிப் பதினெட்டு, தமிழ் வருடப் பிறப்பு, ஆங்கில வருடப்பிறப்பு, கார்த்திகை தீபம், தைப்பூசம் (பிரம்மோற்சவம்) பங்குனிஉத்திரம் ஆகியன சீரிய திருவிழாக்களாகும். தைப்பூசத் தேர்த்திருவிழா மிகப் பெரிய திருவிழாவாகும்.

## நித்திய பூசைக் கட்டளைகள் மற்றும் அர்ச்சனைகள்

மருதமலையானை இராஜ அலங்காரத்தில் தரிசிக்க கண்கோடி வேண்டும். மருதப்பனுக்கு தங்கள் பெயரால் அபிஷேக பூஜை நடத்த ஒருவர் ரூ. 3000 செலுத்தினால் நித்திய பூஜாக் கட்டளை என்னும் திட்டத்தில் அப்பணத்தை வங்கியில் முதலீடு செய்து, அதன் மூலம் கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு ஆண்டுக்கு ஒரு முறை அவர் விரும்பும் நாளில் சுவாமிக்கு அவர் பெயரில் விசேட அபிசேக பூசைகள் செய்யப்பட்டு பிரசாதம் அளிக்கப்படும். மேலும் ரூ. 50 மட்டும் செலுத்தி தங்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டால் அவர் பெயரில் கிருத்திகை நாட்களில் சுவாமிக்கு அர்ச்சனை செய்து, ஒரு வருடத்திற்கு பிரசாதம் தபாலில் அனுப்பி வைக்கப்படும். வெளிநாடுகளில் இருந்தும் கூட பலர் இத்திட்டங்களில் பங்கேற்றுமருதமலையானின் அருள் பெற்று வருகிறார்கள்.

## பக்தர்களுக்கான வசதிகள்

மருதாசலமூர்த்தியின் அருள்பெற கடலெனத் திரண்டு வரும் பக்தர்களின் வசதிக்காக பல்வேறு திருப்பணிகள் செய்யப்பட்டுள்ளன. மலையின் அடிவாரத்திலிருந்து மலைக்கோயிலுக்கு மனங்கவரும் மலைப் பாதை அமைக்கப்பட்டு மூன்று பேருந்துகள் குறைந்த கட்டணத்தில் திருக்கோயில்நிர்வாகத்தின் சார்பில் விடப்பட்டுள்ளன. மலைச்சாலையிலும் படிக்கட்டுகளின் இருபுறமும் மின்விளக்குகள் அமைக்கப்பட்டு பக்தர்கள் பகலில் மட்டுமின்றி இரவிலும் வந்து செல்ல வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

பக்தர்களின் வசதிக்காக மலைமேல் திருமண மண்டபமும், அடிவாரத்தில் 12 அறைகள் கொண்ட 'மருதம்' விடுதியும்குறைந்த வாடகைக்கு நிர்வாகத்தாரால் விடப்படுகிறது.

## அருளாளர்கள் திருப்பணி :

தேவர் பிலிம்ஸ் அதிபர் அருளாளர் அமரர் உயர்திரு. சாண்டோ எம்.எம்.ஏ. சின்னப்பா தேவர் அவர்களின் இடைவிடா முயற்சியால் ஒழுங்கு செய்யப்பட்ட மலைப்பாதைகள் மற்றும் இளைப்பாறு மண்டபங்களும் கட்டப்பட்டு, மின்விளக்குகள் அமைக்கப்பட்டன. சிந்தை கவரும் வகையில் மருதமலை முருகன் பெருமைகளைத் திரைப்படங்கள்மூலம் உலகத்திற்கு நன்கு பரப்பிய பெருமை இவரையே சேரும்.

## சிறுவாணி தண்ணீர் வசதி:

சுவைமிகு சிறுவாணிக் குடிநீர் சுமார் 6 இலட்சம் ரூபாய் செலவில் மலை அடிவாரத்திற்கு கொண்டு வரப்பட்டு, மெய்யன்பர்களின் அன்பளிப்பு மூலம் கிடைத்த மோட்டார்கள் மற்றும் குழாய்கள் மூலம் தண்ணீர் மலைமேல் கொண்டு செல்லப்பட்டுள்ளதால்பக்தர்களுக்கு தாராளமாக கிடைக்கிறது.

## திருக்கோயிலிருந்து செய்யப்படும் சமுதாயப் பணிகள் :

### அன்பு இல்லம் :

ஆதரவற்ற குழந்தைகள் தங்கிப் பயிலத் திருக்கோயிலின் சார்பில் வடவள்ளியில் அன்பு இல்லம் கட்டப்பட்டு பராமரிப்புச் செலவை ஆலய நிர்வாகமே செய்து வருகிறது. இங்கு தற்போது 32 அனாதை மாணவர்கள் பயன் பெற்று வருகிறார்கள். இவர்களுக்கு மேல் நிலைப் பள்ளி வரை கல்வி தேவஸ்தான செலவில் வழங்கப்படுகிறது.

### சித்த வைத்தியசாலை :

மக்கள் நலனுக்காக வடவள்ளி கிராமத்தில் சித்த வைத்தியசாலை அமைக்கப்பட்டு ஆண்டுக்கு ரூ. 30,000 செலவில் சித்த மருந்துகள் மக்களுக்கு வழங்கப்படுவதால், அதிகமான மக்கள் உடற்பிணி நீங்கி பயன் பெறுகிறார்கள். சித்த மருத்துவமனை மற்றும் நூல் நிலையம் அமைந்துள்ள வகையில் புதிய கட்டிடம் ஒன்று உபயமாக உயர்நிலைப் பள்ளி வளாகத்தில் வடவள்ளியில்கட்டப்பட்டுள்ளது. இங்கு சித்த வைத்தியசாலையும் நூல் நிலையமும் அமைந்துள்ளன.

### மேல்நிலைப்பள்ளி :

மருதமலை திருக்கோயிலின் சார்பில் வடவள்ளி கிராமத்தில் 1971-ல் ஒரு கீற்றுக் கொட்டகையில், அறிவு ஒளிபரப்ப ஆரம்பிக்கப்பட்ட உயர்நிலைப்பள்ளி நிரந்தரக் கட்டிடங்களுக்கு மாற்றப்பட்டு தற்போது மேல்நிலைப்பள்ளியாக உயர்ந்துள்ளது. மாணவர்களின் நலனுக்காகப் பல்வேறு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பல்வேறு வகுப்பறைகளும், ஆய்வுக்கூடங்களும் கொண்ட புதிய மேல்தளத்துடன் கூடிய கட்டிடம் திறக்கப்பட்டு உள்ளது. இரண்டாம் தள வேலைகளும் துவங்கப்பட உள்ளது. மருதாசல மூர்த்தியின் அருள்பார்வையில் இப்பள்ளி நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து அறிவு மணம் பரப்பி வருகிறது.


### திருப்பணி :

திருக்கோயிலின் ஓர் ஆண்டு வருவாய் சுமார் ரூ. 64 இலட்சமாகும். ஆன்றோர்கள் சான்றோர்களைக் கொண்ட திருப்பணிக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இத்திருக்கோயிலின் திருப்பணிகள் சுமார் ரூ. 2 கோடி செலவில் வேலைகள் துவக்கப்பட உள்ளன. மருதப்பனுக்கு தங்கரதமொன்று சுமார் ரூ. 75இலட்சம் செலவில செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆலயத் திருப்பணி முடிந்த பின் ரதம் ஓடும் பாதை அமைக்கப்பட்டதும் ரத வேலை துவங்கப்பட உள்ளது.


### ஆலய நிர்வாகம் :

இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை துணை ஆணையர்/செயல் அலுவலரின்கீழ் இத்திருக்கோயிலின் நிர்வாகம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

மக்கள் மனங்கவரும் மருதமலைக்கு பக்தர்கள் கடலலைபோல் திரண்டுவந்து, திருப்பணிகளில் பங்கேற்று மருதமலையானைக் கண்குளிரக் கண்டு மனமுருகி வழிபட்டு, அவனருள் பெற்றுப் பயனடைய வாழ்த்துகிறோம்.



**சென்னை தங்கசாலை அருள்மிகு ஏகாம்பர நாதர் ஆலயத் திருக்குடநீராட்டு விழா 29-2-93 அன்று மிகச் சிறப்பாக நிகழ்த்தப் பெற்றது. மேதகு முன்னாள் குடியரசுத் தலைவர் திருமிகு ஆர். வெங்கட்ராமன் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். காஞ்சி ஸ்ரீ சங்கர மட அதிபர் ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதிசுவாமிகள் பங்கேற்று நல்லாசி வழங்க விழா இனிதே நடைபெற்றது.**


சித்திர பாரதம்
க.வ: செவ்வேள்
MN.RAJA
விராட தேசத்தில் பாண்டவர்கள் மறைந்து இருப்பின் அவர்களை எவ்வாறு வெளிப்படுத்தலாம் என ஆலோ-சனை நிகழ்த்துகிறான் துரியோதனன்
கர்ணன் தன் கருத்தை இவ்வாறு தெரிவிக்கிறான். "நாம் விராடனுடைய ஆக்களைக் கவர்ந்தோமானால் பாண்டவர்கள் அங்கிருந்தால் நிச்சயம் நம்மோடு ஆநிரை மீட்சிக்காகப் போர் நிகழ்த்த வருவார்கள்.
யாரும் போருக்கு வரவில்லையானால் அங்கு பாண்டவர்கள் இல்லை என்பதையும் நாம் தெளிவு செய்து கொண்டு விடலாம்
பலே! கர்ணா! பலே சரியான யோசனை!
"ஆநிரை கவர யாரை நீ அனுப்பப் போகிறாய் துரி-யோதனா?" சகுனி வினவ "என் நண்பன் திரி-கர்த்தராசன் ஆநிரை கவர்வதில் மகாவல்லவன். அவனையே அனுப்பலாம்" என்கிறான் துரியோதனன்
துரியோதனன் ஆலோசனைக்கிணங்க திரிகர்த்த-ராசன் அளவிலாத தன் சேனைகளோடு விராட தேசத்தின் தெற்கெல்லையைத் தாக்கி ஆக்கூட்டங்-களைக் கவர்ந்து செல்கிறான்.
பசுக்கூட்டங்களைப் பறிகொடுத்த இடையர்கள் விராடனிடம் ஓடிப் போய் முறையிடுகிறார்கள்.


கங்க பட்டரே! என் மைத்துனன் கீசகன் மடிந்ததும் எனக்கு வந்த சோதனையைப் பார்த்தீர்களா? இப்பொழுது என்ன செய்வது?
கலக்கம் எதற்கு வேந்தே! நம் விருதுபெற்ற மகா-மல்லன் பலாயனனை அழைத்துக் கொண்டு இப்பொழுதே நாம் போருக்குப் புறப்படுவோம்.
விராடன், கங்கபட்டர், பலாயனன், தாமக்கிரந்தி நந்திரிபாலன் ஆகியோரையும் அளவிலாத் சேனைகளையும் அழைத்துக்கொண்டு போய் போரிடுகிறான்
ஆற்றல் மிக்க திரிகர்த்தராசன் எளிதில் விராடனை வென்று அவனை உயிரோடும் சிறைப்பிடித்து தன் தேர்க்காலில் கட்டித் தேரைப் பறக்கவிடுகிறான்.
"பலாயனா! ஆபத்து, ஆபத்து, விராடமன்னரை உடனே போய் சிறை மீட்டுவா" கங்கபட்டர் அறைகூவ பலாயனன் திரிகர்த்தராசனை வழிமறித்து வீரப்போர் புரிகிறான்.
வெறிகொண்ட வேங்கையைப் போல் கதாயுதத்துடன் திரிகர்த்தன் படையைப் பந்தாடுகிறான் பலாயனன் திரிகர்த்தனுடைய படை சிதறி ஓடுகிறது. பலா-யனின் வீரத்திற்கு முன் திரிகர்த்தராசன் எம்-மாத்திரம்? திரிகர்த்தராசனின் தேர் மீது பாய்ந்து பலாயனன் அவனை உயிரோடு சிறைப்பிடித்து அவனைத் தன் தேர்க்காலில் கயிறுகொண்டு கட்டுகிறான்.
விராடனையும் கட்டவிழ்த்து பலாயனன் விடுவிக்கிறான்.
பலே பலாயனா பலே! உன் வீரத்தை நான் மெச்சுகிறேன்.
தெற்கெல்லையில் பலாயனன் ஆநிரைகளை மீட்கும் அதே சமயம், துரியோதனன் வீடுமர், விதுரர், துரோ-ணர், கர்ணன், சகுனி உள்ளிட்ட அனைவருடனும் வந்து விராடனின் வடக்கெல்லையைத் தாக்கி ஆநி-ரைகளைக் கவர்கின்றனர். இடையர்கள் அரண்-
மனைக்கு வந்து முறையிட—" இப்பொழுது நாம் என்ன செய்ய முடியும்? என்று மயங்குகிறாள் சுதேட்டிணை.

# சென்னை அருள்மிகு ஏகாம்பரேசுவரர் தல வரலாறு

மகாவித்வான் பண்டித நடேசனார், பி.ஏ., ஜெ.பி.

'ஏகம்பத்துறை எந்தாய் போற்றி!
பாகம் பெண்ணுரு வானாய் போற்றி!''

— திருவாசகம்

''சீர் பரவு பரஞான ஒளியாகு
வெளியாகித் தெளிவற் றோர்க்கு
ஏர் பரவி உருவெனவும் அருவெனவும்
உருவருவம் எனவும் தானாம்
நீர் பரவி மறை முடிவுக் கப்பாலாய்
ஆநந்த நிருத்தஞ் செய்தே
பார்பரவ வரும் ஏகாம்பரத்து ஒருவர்
இருபதமே பணிதல் செய்வாம்.

—பழைய காஞ்சிப் புராணம்

காசியை விட வீசம் பெரிது காஞ்சி என்ப. இதன் தலையாய காரணம் 'காசி'ப்பதியின் திருப்பெயரைத் தன்னகத்தே கொண்டமை யால் ஆகும்.

எல்லையில் ஆகமம் இயம்பிய சிவபெரு மான் தாம் விரும்பிய பூஜையைத் தம் இறைவியே (காமாட்சி) மேற் கொண்டு பூசிக்க, அச்சமயம் கம்பாநதி வெள்ளம் பெருகி வர அம்பிகை தழுவக் கண்டு, சிவனே குழைந்தமை யால், ஏகாம்பரநாதர் 'தழுவக் குழைந்தநாத ரானார்.''

காசி, காஞ்சி, அவந்தி, துவாரகை, மதுரை, மாயை, அயோத்தி என்பன முக்தி தரும் ஏழு தலங்கள் ஆகும். அவ்வேழனுள் மிகச் சிறப்பு வாய்ந்தது திருக்கச்சி எனும் காஞ்சி மாநகரமாகும். இது சக்தித் தன்மை வாய்ந்த பிருதிவித் தலமாகும். பஞ்சபூத ஸ்தலங்களுள் மிக முக்கியமானது காஞ்சியே ஆகும். அன்புடன் அடியார்கள் நினைத்தால் முத்தி தரவல்லது இத்தலம். அம்பிகை இனிது இருந்து உயிர்கள் உய்ய முப்பத்திரண்டு அறங் களையும் செய்து காட்டி உலகினை உய்வித்த பெருமையினையுடையது இத்தலம். அதன் காரணமாகவே 'அறப்பெருஞ் செல்வி' எனக் காரணப் பெயரும் பெற்றாள் காமாட்சி, மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறப்பு வாய்ந்தது காஞ்சியம்பதியே. முத்தித் தரும் இத்தலத்திற்கு காஞ்சிபுரம், பிரளய சித்து, சிவபுரம், விஷ்ணுபுரம், மும்மூர்த்தி வாசம், பிரமபுரம், காமபீடம், தபோமயம், சகல சித்தி, கன்னிகாப்பு, துண்டீரபுரம், தண்டகபுரம் எனப் பன்னிரு திருநாமங்கள் உண்டு. இததகைய சீரும் சிறபபும் பெற்ற காஞ்சியைத் தினசரி சென்று பார்ப்பது மிகவும் கடினமானது என்று கண்ட மெய்யன் பர் ஒருவரே சென்னையில் அக்காலத்தில் இடையர்பாளையம் என்று சொல்லப்பட்டதும் தற்காலத்தில் பூங்கா நகர் என்று அழைக்கப் படும் பகுதியில்,எல்லாம் வல்ல ஸ்ரீஏகாம்பரேசு வருக்கு இத்திருக்கோயிலைத் தோற்றுவித்தார்.

சென்னார்குப்பம் என்பதே சென்னைப் பட்டினமாயிற்று. தொண்டமான் சக்கர வர்த்தி ஆண்ட தொண்டை மண்டலத்தின் முக்கியப் பகுதியே சென்னை மாநகரம். பழங் காலத்தில் சென்னம்பன் குப்பம் முதல் 'பூந் தண்மல்லி' (பூவிருந்தவல்லி) வரை பெரும் மணற்காடே. கரிகாற்சோழன் (திருமாவளவன்) தங்கியபோது பூந்தண்மல்லி மணமிக்க மல் லிகைப் பூவிற்குப் பேர் பெற்றது. அதனரு குள்ள மாங்காடு, கோவூர், குன்றத்தூர் வெற்றி லைக்கும் பாக்கிற்கும் பேர் போனவை. கரி காலன் வெற்றிலை தின்னும் பழக்கமுடையவன் என வரலாறு கூறுகின்றது.

இம்மணற் காட்டில் களிமண்ணால் கட்டிய கோட்டைகளையுடைய (கோட்டம்-கோட்டை) குறும்பர்கள் வாழ்ந்திருந்தார்கள். சென்னைக் கடற்கரை 'சென்னை' எனும் ஒருவகை மீன் இனத்திற்குப் பேர் பெற்றது. கடற்கரை வாழ் மீனவர் இடங்களைக் குப்பம் என்ப. அவர் களைப் பட்டினவர், பரதவர், செம்படவர் என்ப. 'செந்தில் என்றால் நெய்தல் நிலம் என்ப. ஆம்; திருச்செந்தூரைத் தான் குறிக் கின்றேன். செந்திலாண்டவனுக்குக் குப்பத்துச் சாமி (குப்புசாமி) என்றும் பெயருண்டு. செம் மண் குப்பத்து மனவர்களுக்கு மீன்பிடிக்க உதவும் 'சென்னை'வலையை நெய்து விலைக்கு விற்க வந்த வியாபாரிகளே ஆங்கிலயர்கள். அவர்களே 'கிழக்கிந்தியக் கமபெனியார்' அவர்தம் கப்பல் வியாபாரத்திற்கு உதவியவர் களைத் துவிபாஷியர் (இரண்டுமொழி அறிஞர்) என்றனர் நகரத்தார். 'சென்னை வலை' பின் னப்பட்ட தொழிற்சாலையே இன்றுள்ள தமிழக அரசினது தலைமைச் செயலகம். பின்னர் அவ்விடத்தில் கோட்டை கட்டினர்.

ஆங்கிலேயர். அவர்கள் வசித்த இடத்தை 'வெள்ளையர் நகரம்' (White Town) என்றும் இந்தியர் வாழ்ந்த இடத்தைக் கருப்பர் நகரம் ( Block Town ) என்றும் பெயரிட்டனர். வெள்ளையர் வசித்த இடமே மதராஸ் பட்டணம். ஐந்தாம் ஜியார்ஜ் சக்கரவர்த்தி சென்னைகு வந்தபோது 'ஜியார்ஜ் டவுன்' ஆயிற்று அது.

வட சென்னையில் கி.பி. 1621 ஆங்கிலேயர் வருகைக்குமுன்னரே மூன்று பெருங்கோயில்கள் இருந்தன. அவை; முத்தியாலுப்பேட்டைக் கோடியிலுள்ள 'மல்லிகார்ஜுனர் கோயில்' (Great Pakoda) பெத்துநாய்க்கன் பேட்டையிலுள்ள 'சென்ன மல்லீஸ்வரர், கேசவப் பெருமாள் கோயில்; இடையர் பாளையத்திலுள்ள 'ஏகாம்பரேசுவரர் கோயில்' என்பன.

22-8-1639-ல் கிழக்கிந்தியக் கம்பெனியார் தலைவர் (Agent) மிஸ்டர் பிரேன்ஸிஸ் டே, 'மதராஸ்' பட்டணத்தை வாங்கினார். அப்போது சென்னைக் குப்பத்தில் (சென்னைப் பட்டிணம்) சுமார் 15 அல்லது 20 குடிசைகளே இருந்தன' என்று1640-41-ல்எழுதிய 'டச்சேக்' பதிவு புத்தகம் குறிக்கின்றது. மீனவர் தலைவன் பெயரால் 'மதராஸ்' அழைக்கப்பட்டது. அத்தலைவன் பெயர் 'மதரேன்' (Madrasan) 'மதுரையீசன்') அல்லது மதுரேசன் என்பது சென்னம்மன் குப்பம் (சென்னைப் பட்டினம்) மகாசிக்குப்பம் 'Mahras Kuppam' என்றனர் மீனவர்.(பார்வை: பழைய சென்னை வரலாறு, முதல் தொகுப்பு பக்கம் 140; ஆசிரியர் மிஸ்டர் ஹென்றி டேவிசன் லோவ்-வெளியிட்ட காலம் 1913) சென்னம்மன் கோயில் (இன்று காளிகாம்பாள்) காலம் கடந்தது; இதனைக் கல்யாணிக்கோயில் என்றும் மீனவர் அழைத்தனர் இக்கோயிலைக் காத்துப் பூஜை புரிந்தவர் மொட்டை எனும் முத்தாச்சாரி. இநத மொட்டையாச்சாரியே ஆங்கிலேயர் கம்பெனியது முதல் தச்சுவேலைக்காரர்; இவரே கப்பல் கட்டும் பணியில் திறமைமிக்கவர் முதல்வர்- என்று வரலாறு கூறுகின்றது.

கி.பி. 1755-ல் ஆங்கிலேயரால் வரையப்பட்ட தேசப் படத்தில் ஏகாம்பரேஸ்வரர் கோயில் (Pagoda ) குறிக்கப்பட்டுள்ளது. இன்று தங்கசாலைத் தெரு என்பது அன்று 'கேலிக்கோ' என்னும் துணிவெளுக்கும் வண்ணாரத் தெரு (Washing Street) எனப்பட்டது. ஆனால் 'ஏகாம்பரேஸ்வரர் தெரு' என்றும் அக்கோயிலைச் சுற்றியுள்ள தெருக்களை மாடவீதிகள் என்றும் கோயில் பக்கத்தில் பிராமணர்கள் வாழ்ந்த பகுதியை ஏகாம்பரேஸ்வரர் கோயில் அக்ரகாரம் என்றும் குறித்துள்ளனர். கி.பி. 1680-இல் ஆங்கிலேயர் உலோக நாணயம், தாள் நாணயம் செய்ய தங்கசாலையை அமைத்த பின்பு 'தங்கசாலை தெரு' எனப் பெயர் வழங்குகின்றது. இன்றும் தென்னிந்திய மத்திய இருப்புப்பாதை அலுவலகத்திலிருந்து சின்னக் கடையம்மன் கோயில் வரையுள்ள வீதியை 'ஏகாம்பரேஸ்வரர் தெரு' என்றே மக்கள் சொல்லுகின்றனர். இதே இக்கோயிலின்தொன்மையைக் காட்டும்.



புதுப்பிக்கப் பெற்றுள்ள அருள்மிகு
ஏகாம்பரேசுவரர் ஆலய இராஜ கோபுரம்

இப்பழைய ஏகாம்பரேஸ்வரர் கோயிலைக் கட்டியவர் 'ஆளிங்காப் பிள்ளை' என்று நம்பப்படுகின்றது என்று ஆங்கில வரலாற்றாசிரியர் எச் டி லோவ் குறித்துள்ளார் (The Present Ekambareswarar Temple in Mint Street believed to have been built by ALLINGALL PILLAI Vide Vol. II p 30 by H.D. Love-Vastige of old Madras) (ஆளிங்கான் பிள்ளை என்றும் ஆளங்காத்தான் பிள்ளை என்றும் பிழைபடப் பிற்காலத்தவர் கூறி வருகின்றனர். சைவப் பிள்ளைமார் திருவாலங்காட்டிலுள்ள ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியை ''ஆலங்காடன், ஆலங்காடான்' என்று வணங்கித் தம் ஆண் மக்களுக்கு பெயர் வைப்பது வழக்கம்).

எனவே, லோவினது வரலாற்றுப்படி இத்திருக்கோயிலை சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னரே ஆளிங்காள் பிள்ளை என்ற பெருமகனாரே திருத்திக் கட்டினார் என்று தெளியலாம்.

சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்பேகட்டிய ஏகாம்பரேஸ்வரர் ஆலயத்தை கி.பி. 1680-இல் புதுப்பித்துக் குடமுழுக்கு ஆட்டியவரே ஆலங்காத்த பிள்ளை (ஆலங்காட்டான்பிள்ளை அவர்கள். அச்சைவப் பெருமகன் ஆங்கிலேயரது வர்த்தகக் குழுவின் 'டுபாஷ்' (துவிபாஷன்-இருமொழியாளர்) ஆக வேலை பார்த்தார்; மிகப் பெரிய தனவான், புகழ் பெற்றவர். தரும சிந்தையுடையவர். இவ்வள்ளல் குடியிருந்த தெருவினை இன்னும் 'ஆலங்காத்தான் தெரு, ஜாம்பஜார், திருவல்லிக்கேணி என்ப.

இவ்வுலகிலுள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் கடவுளைக் காண முயல வேண்டும். அப்படி முயன்றவர் நிலையான முக்தியினைப் பெறுவர். 'ஊனடைந்த உடம்பின் பிறவியே' தானடைந்த உறுதியைச் சாருமால், பதனடைந்த மலர்ப் பொழில தில்லையுள் மானடஞ் செய்வார் பொற்றாள் தொழ' என்ற தெய்வச் சேக்கிழார் வாக்கின்படி பெறுதற்கரிய மானிடப் பிறவி எடுத்ததன் நோக்கம், மனமொழி மெய்களால் திருமும் தேவாலயஞ் சென்று மூர்த்தியை வணங்கி வழிபடுவதற்கேயாம். உடலைப் பெற்றும் ஊமையராய் செவிடராய் இறைவனாராது புகழைப் பாடாமலும் கேட்காமலும் சிந்தியாமலும் இருப்பது பயனற்றதாகும்.

## இத்திருக்கோயிலில் உள்ள முக்கிய சன்னதிகளும் அதன் பெருமைகளும்

### அரச மரத்தடி லிங்கம் அல்லது ராமனாதர் சன்னதி:

இத்திருக்கோயிலில் உள்ள அரசமரத்தடி லிங்கம் சன்னதி இத்திருக்கோயில் கட்டுவதற்கு முன்பே உள்ளதாக செவிவழிச் செய்திகள் கூறுகின்றன. முற்காலத்தில் பல சாதுக்கள் இங்கு தங்கி இறைவனை வழிபட்டதாக கூறப்படுகிறது. அவர்களில் யாழ்ப்பாணம் சுவாமி என்பவர் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இச்சன்னதியை ராமனாதர் சன்னதி என்றும் அழைப்பர். பக்தர்கள் இந்த லிங்கத்தை தொட்டு தாங்களே பூஜை செய்து மன நிறைவு பெறுவது ஓர் குறிப்பிட்டத்தக்க அம்சமாகும். இங்கு உள்ள கல்லால மரமும், அரச மரமும் ஏறக்குறைய 300 வருடங்களுககு மேற்பட்டது என்று சொல்லப்படுகிறது.

### வன்னிமர விநாயகர் சன்னதி :

வன்னிமரத்தடியில் விநாயகப் பெருமான் எழுந்தருளியுள்ளது காணுதற்கரிய காட்சியாகும். மிகவும் சக்தி வாய்ந்த இவ்விநாயகர் பெருமானை பௌர்ணமிக்கு அடுத்த ஐந்தாவது நாள் சங்கடஹர சதுர்த்தி அன்று வழிபாடு செய்பவர்களுக்கு நினைத்த காரியங்கள் கை கூடுவது பலரின் அனுபவமாகும்.

### பஞ்சமுக விநாயகர் :

ஊர் பெயர் தெரியாத ஓர் சாது இந்த பஞ்சமுக விநாயகர் சன்னதியை நிறுவினார் என்பது செவிவழி செய்தியாகும். ஒரே கல்லில முன்பக்கம் பஞ்சமுக விநாயகர் பின்பக்கம் முருகபெருமானும் ஐந்து தலை நாகத்துடன் எழுந்தருளியுள்ளது ஓர் அபூர்வமான காட்சி என்று பலராலும் போற்றப்பட்டு வழிபாடு செய்யப்படுகிறது.

### ஆஞ்சநேயர் சன்னதி:

சின்ன கோயிலில் அக்னி மூலையில் ஆஞ்சநேயர் சுவாமி எழுந்தருளியுள்ளது மிகவும் சிறப்பு வாய்ந்ததாகும். எல்லா நலன்களையும் வாரி வழங்கும் இந்த ஆஞ்சநேயரை இப்பகுதி வாழ் மார்வாடி அன்பர்கள் மிகவும் போற்றிப் பூசித்து வருவது குறிப்பிட தகுந்த அம்சமாகும்.

### நவக்கிரக சன்னதி:

அருள்மிகு காமாட்சி அம்மன் பார்வையில் உள்ளதாலும் யாரோ ஒரு சாது வைத்ததாக சொல்லப்படுகிற ஓர் எந்திர சாதனத்தாலும் இத்திருக்கோயிலில் உள்ள நவக்கிரக சன்னதி எல்லாவிதமான தோஷங்களையும் நிவர்த்திக்கும் சக்தி படைத்ததாக உள்ளது. சனிப் பெயர்ச்சி, குருப்பெயர்ச்சி போன்ற விசேஷ தினங்களில் ஆயிரக்கணக்கான பக்கள் இங்கு உள்ள நவக்கிரகங்களை வழிபட்டு எல்லாவிதமான நலன்களும் பெறுகின்றனர். சென்னை மாநகரத்திலேயே இத்திருக்கோயிலில் உள்ள நவக்கிரக சன்னதிதான் மிகவும் சிறப்புடையது என்று பலராலும் போற்றப்படுகிறது. அதன் காரணமாகவே பாமர மக்கள் ஸ்ரீஏகாம்பரேஸ்வரர் கோயில் என்று அழைப்பதைவிட நவக்கிரக சன்னதிக் கோயில் என்றே அழைக்கின்றனர்.

### இத்திருக்கோயில் நடைபெறும் முக்கிய உற்சவங்கள்

ஆண்டுதோறும் பங்குனி மாதத்தில் பிரம்மோற்சவம் மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. இப்பெரு விழாவில் நான்காம் நாள் ரிஷப வாகன உற்சவமும், ஏழாவது நாள் திருத்தேர் உற்சவமும், பத்தாவது நாள் திருக்கல்யாண உற்சவமும் பெரும் சிறப்பு வாய்ந்தவையாகும். மற்றும் வைகாசி மாதம் வசந்த உற்சவம், ஆனி மாதம் ஆனி திருமஞ்சனம், ஆடி மாதம் அருள்மிகு காமாட்சிக்குத் திருவாடிப்பூர ஊஞ்சல் உற்சவம், ஆவணி மாதம் வன்னிமர விநாயகர் சதுர்த்தி, புரட்டாசி மாதம் நவராத்திரி விழா, ஐப்பசி மாதம் கந்த சஷ்டி, கார்த்திகை மாதம் கார்த்திகை தீபம், மார்கழி மாதம் ஆருத்ரா தரிசனம், தை மாதம் தைப்பூசம், மாசி மாதம் மகா சிவராத்திரி முதலிய திருவிழாக்களும் சிறப்புடன் இத்திருக்கோயிலில் கொண்டாடப்படுகிறது.

ஆன்றோர்கள், சான்றோர்களின் முயற்சியால் இத்திருக்கோயிலின் இராஜகோபுரம் திருப்பணிச் செய்யப்பட்டு திருக்குட நீராட்டு விழாவும் 29-1-93இல் நிறைவேற்றப்பட்டிருப்பது குறிப்பிட த்தக்கது.




**ஜி. கல்யாணம், எம்.ஏ.,**

''நாராயணாய நம என்னும் நல்நெஞ்சர்
பாராளும்பாதம் பணிந்து ஏத்துமாறு அறியேன்
கார் ஆரும்மேனிக் கருணாகர மூர்த்திக்கு
ஆராதனைஎன் அறியாமை ஒன்றுமே''

.— கம்பர்.

ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப் பெறாத சில சிறந்த வைணவத் திருப்பதிகளும் நம்முடைய நாட்டிலிருக்கின்றன வென்பதை யாவரும் அறிவர். அத்தகையவற்றில் ஒன்று மதுராந்தகம் கோதண்டராமர் கோயில். சென்னை-விழுப்புரம் இருப்புப் பாதையில் மதுராந்தகம் என்ற நிலையத்திற்கு மேற்கில் ஒரு கல் தொலைவிலுள்ளது. சென்னையிலிருந்து தெற்கே செல்லும் நெடுஞ்சாலையில் 50ஆவது கல்லில் இருக்கிறது. பல பக்கங்களிலுமிருந்து பஸ்கள் செல்லுகின்றன. தங்குவதற்கும் உணவுக்கும் விடுதிகள் இருக்கின்றன.

இப்பக்கங்களிலுள்ள கோயில் கல்வெட்டுக்களில் இவ்வூர் 'ஜயங்கொண்ட சோழமண்டலத்துக் களத்தூர்க் கோட்டத்து மதுராந்தக சதுர்வேதி மங்கலம்' என்று குறிக்கப் பெறுகிறது. சோழ மண்டலத்தை முதலாம் இராஜராஜ சோழனுக்கு முன்னால் ஆண்ட உத்தம சோழன் என்னும் மதுராந்தகச் சோழனால் வேதம் ஓதும் அந்தணர்களுக்கு மானியமாக விடப்பட்டதால் மதுராந்தக சதுர்வேதி மங்கலம் ென்ற பெயர் பெற்றது. தல மான்மியத்தில் மதுரசம் பொருந்திய பல புண்ணிய தீர்த்தங்கள் நிறைந்த இடம் ஆனதால் மதுராந்தகம் என்ற பெயர் ஏற்பட்டது என்று கூறப்படுகிறது.. இப்பகுதிக்கு வகுளாரண்யம் என்ற பெயரும் உண்டு. இத்தல விருட்சம் வகுளம் (மகிழமரம்) ஆனபடியால் இப் பெயருண்டாயிற்று.

கோதண்டராமர் கோயில் மதுராந்தகம் பெரிய ஏரிக்கரைக்குக் கிழக்கிலும் நெடுஞ்சாலைக்கு மேற்கிலும் அமைந்திருக்கிறது. கிழக்குப் பார்த்த சந்நிதி. முன்கோபுர வாயிலுக்கு மேற்கே திருக்குளம் இருக்கிறது. புஷ்கரணிக் கரையிலே அனுமானுக்குத் தனி சந்நிதி இருக்கிறது. இந்த தீர்த்தத்திற்கு மேல் புறம் கோயில் உள்ளது. கோயில் வாயிலை ஒரு கோபுரம் அணி செய்கிறது. கோயிலில் ஒரு வெளிப்பிரகாரம் இருக்கிறது. கோதண்ட ராமர், ஜனகவல்லித் தாயார் இவர்களின்

கோயில்களைச் சுற்றி உட்பிரகாரங்களும் இருக்கின்றன. கோபுர வாயிலைத் தாண்டி உட்சென்றதும் வலது பக்கம் தெற்கு நோக்கி விஷ்வக்சேனர் (சேனை முதலியார்), உடையவர், பெரிய நம்பிகள் சந்நிதிகளும், இடது பக்கம் வடக்கு நோக்கி வேதாந்த தேசிகன் சந்நிதியும் இருக்கின்றன. முன்மண்டபத்தைக் கடந்து சென்றால் கோதண்டராமர் சந்நிதி. இராமபிரான் நின்ற திருக்கோலத்தில் கிழக்கே திருமுகமண்டலத்துடன் சீதாபிராட்டி, இளைய பெருமாள் சமேதராய் சேவை சாதிக்கிறார். இந்த மூல மூர்த்திகளுக்கு முன்னால் கருணாகரப் பெருமாள் ஸ்ரீதேவி பூதேவியுடன் (உற்சவர்) காட்சியளிக்கிறார். இராமர், சீதை இலக்குவர், உற்சவ மூர்த்திகளும் அங்கே எழுந்தருளியிருக்கின்றனர். விபாண்டகமகரிஷியின் திருவுருவமும் இருக்கின்றது. இந்த கருணாகரப் பெருமானையே கோதண்டராமர் வழிபட்டதாகத் தலமான்மியம் கூறுகிறது. மூல மூர்த்தி எழுந்தருளியிருப்பது புஷ்பக விமானம்.

தெற்குப் பிரகாரத்தில் ஜனகவல்லித் தாயார் சந்நிதி கிழக்கு நோக்கி இருக்கிறது. வடமேற்கு மூலையில் உடையவர் பஞ்சசம்ஸ்கார மண்டபம் உள்ளது. வடக்குப் பிரகாரத்தில் ஆண்டாள் சந்நிதி கிழக்கு பார்க்க இருக்கிறது. இந்தப் பிரகாரத்திலேயே தலவிருட்சமான வகுள (மகிழ) மரம் இருக்கின்றது. இதை ''ஸ்ரீவைகுண்ட வர்த்தனம்'' என்றும் கூறுவர். இந்தப் பதியில் இரண்டு தீர்த்தங்கள் சிறந்ததாகச் சொல்லப்படுகிறது. கோயிலுக்குக் கிழக்காக உள்ள திருக்குளம் 'இராமசந்திர புஷ்கரணி' கோயிலுக்குப் பின்புறம் இருக்கும் ஏரி, பகவத் இராமனுஜ தீர்த்தம். உடையவர் ஏரியில் நீராடிய இடம். 'ஸ்ரீபாசியக்காரர் படித்துறை' என்று வழங்கப் பெறுகின்றது. சித்திரையில் சித்திரா பௌர்ணமி உடையவர் உற்சவம் வசந்தோற்சவம், வைகாசியில் கோடை உற்சவம், ஆனிப் பிரமோற்சவம், ஆடி சிரவணத்தில் கருணாகரப் பெருமாளுக்கு ஜேஷ்டாபிஷேகம், ஆடிப்பூரத்தில் ஆண்டாள் திருக்கல்யாணம், ஆவணி சுக்கில பஞ்சமியில் உடையவர் பஞ்சசம்ஸ்காரஉற்சவம், பவித்தரோற்சவம் புரட்டாசியில் நவராத்திரி, தேசிகன் உற்சவம் கார்த்திகையில் பாஞ்சாரத்திர தீபம், மார்கழியில் பகல் பத்து, இராப்பத்து, கருட சேவை, பெருமாளுக்கு நாச்சியார் திருக்கோலம் (மோகினி) அமாவாசையில் அனுமத்ஜயந்தி போகி நாளில் நீராட்டம், தை மாதத்தில் பரிவேட்டை, மாசி மகத்தில் தெப்ப உற்சவம் பங்குனி உத்திரம், பங்குனி (அல்லது சித்திரை) யில் ஸ்ரீராமநவமி உற்சவம் இவைகள் சிறந்த முறையில் நடை பெறுகின்றன. இராமருக்கு உற்சவம் இரண்டு நாட்கள்தான். மற்றவையெல்லாம் கருணாகரபெருமாளுக்கே. முழு சாங்கியத்துடனும் இரண்டு கால பூசைதான். மற்றும் உபாயமாக நான்கு காலங்கள் நடைபெறுகின்றன.

இந்த வகுளாரண்ய சேத்திரமானது, சுகர், விபாண்டகர் போன்ற முனிவர்கள் தவப்பயன் பெற்ற இடமாகவும், திருமழிசை ஆழ்வார் சித்தி பெற்ற இடமாயும் புராணப் பிரசித்தி பெற்றதாகவும், ஆசாரியர்களில் பெரிய நம்பிகள், ஸ்ரீபகவத் இராமானுஜன், நிகமாந்த மகாதேசிகன் முதலியவர்கள் உகந்தருளியதாயும் 'பிரம்மவைவர்த்தம்' 'பார்க்கவம்' போன்ற புராணங்களில் சிறப்புப் பெற்றதாகவும் விளங்குகின்றது.

காஞ்சியிலிருந்து இராமானுஜர் தகுந்த குரு ஒருவரை நாடிப் புறப்பட்டார் பெரிய நம்பிகள் திருவரங்க மிருந்து புறப்பட்டார். இருவரும் மதுராந்தகத்தில் சந்தித்தார்கள். உடையவர் பெரிய நம்பிகளின் திருவடிகளை வணங்கி அவரிடம் 'பஞ்சசம்ஸ்காரம்' (தாபம், புண்டரம், நாமம், மந்திரம், யாகம்) என்னும் வைணவதீட்சையை இத்தலத்திலுள்ள மகிழ மரத்தடியிலே பெற்றார். வைகுண்டவர்த்தனம் என்பது இந்த மகிழமரத்தின் திருநாமம். இங்கு எம்பெருமானார் 'துவய மந்திரோபதேசம்' பெற்றதால் இத்தலம் துவயம்விளைந்த திருப்பதி என்றும் வழங்கலாயிற்று. திருமந்திர திருப்பதி என்றும் கூறுவர். இவ்வைபவத்தைத் திருவாறாயிரப்படி குருபரம்பரைப் பிரபாவத்தில் பரக்கக் காணலாம் இராமானுஜரின் மாணவரான வடுக நம்பிகள் 'யதிராஜவைபவம்' என்ற நூலிலும் இந்நிகழ்ச்சியைக் கூறியிருக்கிறார் உடையவர் இந்த தலத்தோடு சம்பந்தப்பட்டிருத்தலால் இதன் மகிமை தனிச்சிறப்புடையது. அதனால் வைணவர்கள் இதை மிகவும் புனிதமாகப் போற்றுகின்றனர். ஆண்டுதோறும் ஆவணி சுக்கில பட்சத்துப் பஞ்சமியில் பஞ்ச சம்ஸ்கார உற்சவம் வெகு சிறப்பாக நடைபெறுகிறது. கோயிலில் உடையவர் பக்கலில் பெரிய நம்பிகளும் சேவை சாதிப்பது தனிச் சிறப்பாகும்

யாதவப் பிரகாசர் என்ற பெருந்துறவி ஒருவர் இத்திருப்பதியின் ஏரிக்கரையில் ஒரு உடும்பாய்க்கிடந்து, பின்னர் கோயில் ஸ்ரீவைஷ்ணவர்கள் திருமலைக்கு எழுந்தருளும் போது அங்கு நீராடி அமுது செய்து அவ்விடத்தில் சிந்திய பிரசாதத்தையுண்டு சாப நீக்கம் பெற்றார் என்பதையும் ஆறாயிரப்படி கூறுகிறது இதையே ஸ்ரீபார்க்கவ புராணம் உத்தரகாண்டம் 34-வது அத்தியாயத்திலும் காணலாம்

பிரமவைவர்த்த புராணத்தில் தல வரலாறு பின்வருமாறு காணப்படுகிறது; பிரம புத்திரர்கள் நாராயணனை வணங்கி மோட்சத்தையடையும் உபாயத்தைக் கேட்டனர். தன் அம்சமான கருணாகரமூர்த்தியின் அர்ச்சகத்தை அவர்களிடம் கொடுத்து நாராயணன் அவர்களை வகுளாரண்யம் (மதுராந்தகம்) சென்று விபாண்டக முனிவர் ஆசிரமத்தில் தங்கி பரம்பொருளை தியானிக்கும்படி அருள் புரிந்தார். அப்படியே அவர்கள் செய்து மோட்சம் அடைந்தனர் பின்னர் இராமபிரான் சீதை இலக்குவருடன் தண்டகாரண்யவாசம் செய்தபோது விபாண்டகர் ஆசிரமத்தில் தங்கி கருணாகரப்பெருமாளை வழிபட்டார்.

இராவண வதத்தின் பின்னர் அயோத்திக்குத் திரும்புகையில் இராமபிரான் முதலியோர் சென்ற புஷ்பகவிமானம் இங்கு தடைபட்டு நின்றது. இராமனாதியோர் இறங்கி மறுபடியும் கருணாகர மூர்த்தியை வணங்கி விட்டு அயோத்திக்குச் சென்றனர்.

நம்முடைய தலங்கள் பலவற்றில் அற்புத நிகழ்ச்சிகள் முற்காலத்திலும் நடந்தன. பிற்காலத்திலும் நடந்திருக்கின்றன. அவ்வகை அற்புதம் ஒன்று மதுராந்தகத்திலும் நடைபெற்றது. தமிழ் நாட்டிலுள்ள பெரிய ஏரிகளில் ஒன்று மதுராந்தகம் ஏரி; அதன் கரையின் நீளம் 12960 அடி; நீர்ப் பிடிப்பின் பரப்பு பதின்மூன்று சதுர மைல்; நூறு அடி ஆழம்; ஐந்து மதகுகள்; அதிக தண்ணீர் வழிந்தோடும் கலிங்கலின் நீளம் நூற்றைம்பது அடி. முன்பெல்லாம் மழைக் காலத்தில் இந்த ஏரிஆண்டு தோறும் உடைத்துக் கொள்வது வழக்கமாக இருந்தது. அதனால் மக்களுக்கு அதிக சேதம்; அரசாங்கத்துக்கு மராமத்து செய்யப் பொருள் செலவு. கிழக்கு இந்தியக் கம்பெனியார் காலத்தில் கி பி 1795-1798 வரை செங்கற்பட்டு ஜாகீரில் கலெக்டராக இருந்தவர் கர்னல் லயனல்பிளேஸ் என்ற துரை மகனார். ஏரி உடைப்பு வரலாற்றை அறிந்த இவர் கரையை பலப்படுத்த சிறந்த முயற்சி எடுத்துக் கொண்டார். ஒரு நாள் ஏரிக்கரையையும் ஊரையும் பார்க்கச் சுற்றிவந்தவர் கோதண்டராமர் கோயிலருகே வந்தார். அர்ச்சகர்கள் வணங்கி கோயிலுக்குள் வந்தார். பிரகாரத்தில் கருங்கற்கள் குவித்து வைத்திருப்பதைப் பார்த்து ‘எதற்காக இவை’ என்று கேட்டார். அங்குள்ளவர்கள் ஜானகி தாயாருக்கு தனிக் கோயில் இல்லை. உடைப்பின் காரணத்தால் விளைச்சல் இல்லை. அதனால் பொருள் முட்டுப்பாடு ஏற்பட்டதால் கோயிலை கட்ட முடியவில்லை’ என்று சொன்னார்கள், ‘உங்களுடைய கடவுள் சக்தியையுடையவராக இருந்தால ஏரி உடையாமல் பார்த்துக் கொள்ளட்டும் அப்படி உடைப்பு ஏற்படாமல் இருந்தால் நான் கோயிலைக் கட்டிக் கொடுக்கின்றேன்’ என்று சொல்லிவிட்டு கலெக்டர் தங்கும் விடுதிக்குச் சென்றார் அன்றிரவு நல்ல மழை; எங்கும் வெள்ளம்; ஏரியில் நீர் நிறைந்து கரைபுரண்டு நிற்கிறது; இப்போதோ இன்னும் சற்று நேரத்திலோ உடைப்பு எடுக்கும்போல் இருந்தது. மிக்க கவலை கொண்ட கலெக்டர் நடு இரவில் தன்சேவகர்களுடன் ஏரியைப் பார்க்கப் புறப்பட்டார். சற்று தொலைவு சென்றார். கலிங்கல் அருகில் வந்தார். திடீரென்று அவர் கண்ட அற்புதக் காட்சிதான் என்னே! மண்டியிட்டார். ‘அதோ பாருங்கள் இரண்டு திவ்யதேஜோமயமானவர் வில் அம்பும் கையுமாய் நிற்கின்றனர்’ என்று கூவினார். பக்கத்திலிருந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை அந்தோ பாவம் அவர்களுக்கு அந்தக் காட்சி கிடைக்கும் பெரும்பேறு இருந்தால்தானே காண முடியும். பின்னர் காட்சி மறையவே கலெக்டர் துரை எழுந்து தன் விடுதிக்கு திரும்பினார். .மழை நின்றுவிட்டது; ஏரியும் உடைத்து கொள்ளவில்லை. இந்த நிகழ்ச்சி ஊரெங்கும் பரவியது. கலெக்டரும் சொன்ன சொல்லைத் தவறவில்லை. ஜனகவல்லித் தாயாருக்குத் தன் மேற்பார்வையிலேயே கோயில் ஒன்றைக் கட்டினார். இதற்கு ஆதாரமாக தாயார் சந்நிதி முன் மண்டபத்தில் ஒரு கல்வெட்டு பொறிக்கப் பெற்றிருக்கிறது. அது பின்வருமாறு:- ‘இந்த தர்மம் கும்பினிஜாகீர் கலைக்டர் லயோனல் பிளேசுதுறை அவர்களது’ இதே பொருளுள்ள தெலுங்கு கல்வெட்டொன்றும் அதனுடன் காணப்படுகிறது. இக்கோயில் தென்புறச் சுவரில் இவருடைய உருவமும் செதுக்கப்பட்டிருக்கிறது. இந்த நிகழ்ச்சி காரணமாக எம்பெருமானை ஏரி காத்த பெருமாள் என்று அழைக்கலாயினர். வைணவ சம்பிரதாயத்தில் இதற்கு வேறு பொருளும் கூறப்படுகின்றது. உடையவரை ஏரியாக வழங்குவது பூர்வாசாரியர் சம்பிரதாயம். அவரைப் பெரியநம்பிகள் மூலம் அருளியதால் எம்பெருமானுக்கு இத் திருநாமம் ஏற்பட்டது என்று கூறுவர்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் இங்கே மற்றொரு நிகழ்ச்சி. வட நாட்டுச் செல்வரான மகனிராம சேட் பாங்கூர் தென்னாட்டுத் திருப்பதிகள் சிலவற்றின் திருப்பணியைச் செய்தார். 1937-ல் மதுராந்தகம் கோயில் திருப்பணியை எடுத்துச் கொண்டார். பெருமாள் சந்நிதியில் சுவரைப் புதுப்பிக்க அஸ்திவாரம் தோண்டினார். பூமியின் கீழ் 20 அடி ஆழத்தில் ஒரு மண்டபம் காணப்பட்டது. அம்மண்டபத்தில் ஒரு தாமிரத் தட்டில் நவநீத கண்ணன் விக்கிரகமும், திருவிலச்சினை (முத்திரை)க்குரிய சங்கு சக்கரங்களும், சில பூசைப் பாத்திரங்களும் காணப்பட்டன பெரிய நம்பிகள் உடையவருக்கு பஞ்ச சம்ஸ்காரம் செய்யும்போது இவற்றைப் பயன்படுத்தியிருக்கலாம் என்று கருதுகின்றனர். ஆகையால் அவற்றை பெரிய நம்பிகள் உடையவர் சந்நிதியில் வைத்துப பாதுகாத்து வரப்படுகிறது. பஞ்சசம்ஸ்கார உற்சவத்தின்போது இந்த கண்ணன் திருவிலச்சினைகளுடன் பெரிய நம்பிகள் உடையவருடன் திருவீதிக்கு எழுந்தருளி வருகின்றார். சுரங்க மண்டபத்துக்குச் செல்ல 20படிகள் இருக்கின்றன. அதை இன்றும் காணலாம்.

தாயார் சந்நிதியிலுள்ள பிளேஸ்துரை கல்வெட்டையன்றி கோதண்டராமர் கோயிலில் கர்ப்பகிரகச் சுவர்களில் இரண்டு கல்வெட்டுகள் பொறிக்கப் பெற்றிருக்கின்றன. ஒன்று இராஜகேசரிவர்மனான திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழனின மூன்றாவது ஆட்சியாண்டில் கோயிலில் இரண்டு விளக்கெரிக்க கமுகப் தோட்டம் ஒன்றைத் தானமாகக் கொடுத்ததைக் குறிக்கின்றது. மற்றொன்று, பரகேசரி வர்மனான திரிபுவனச் சக்கரவர்த்தி விக்கிரம சோழனின் ஒன்பதாவது ஆட்சியாண்டில் கோயிலுக்குப் பொருள் வழங்கியதை அறிவிக்கின்றது.

•

இத்தகைய பெருமைமிக்க திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் சிறப்புற நிறைவேற்றப்பட்டு அண்மையில் மகாசம்ப்ரோட்சணம் நிகழ்த்தப் பெற்றது.

# ஆறுபடை வீடுகளில் அருள் முருகன்

புலவர் **தருமாம்பாள்**




குங்குமச் சாந்தாக கொஞ்சுமெழில்
கோகிலமாம்
மங்கை தெய்வானையை மணந்திங்கு மகிழ்வாக
செங்கமலமுகம்காட்டி சிந்தைதனில்தெளிவூட்டி
அங்கம் குளிர்விக்க அமர்ந்திட்டாய்பரங்குன்றில்




செருக்கினமாம் அசுரர்களைவேரறுத்து
ஒழித்திடவே
கருத்தாக முனைந்தவனே! கதிர்வேலா!
மயிலோனே!
கருங்கடற் கரையோரம் தனியாக அமர்ந்தவனே
வருகின்ற அன்பர்க்கு வரமொன்று
தந்தருள்வாய்!




வேண்டினார்க்கு வேண்டிய வரபருளும்
வேலவனே!
அண்டினார்க் கில்லைபயம் அன்பருளே
உந்தன் மயம்.
ஆண்டியொரு கோலமாக அமர்ந்தாயே
பழனியிலே.
காணவந்த பக்தையிவள் சிறந்திடவே
அருள்வாயே;




அறிவுக்குப் பிறப்பிடமே அழகுக்கு இருப்பிடமே
நெறிபிறழா வாழ்விங்குநானிலத்தில் மேவிடவே
செறிவுடனே அருள்புரிவாய்! சிந்தையது
ஒளிர்ந்திடவே
அறிவுறுத்தி நிற்கின்றாய் சுவாமிமலை
குருநாதா!




நாடுகிறைஅன்பர்குழாம் பரவிநிதம் துதிக்கின்ற
நீடுவேல் செவ்வேள்நின்றாயே சினம்தணிய
பாடுகின்றேன் உனையின்று திருத்தணிகை
மலையோனே
ஆடும்பரி மேலமர்ந்த அழகாநீ அருள்வாயே!




நாவற்கனி ஔவைக்கு நயமுடனே கொடுத்து
பாவிலொரு தமிழ்கேட்டு பரவசமாய்
மகிழ்ந்தோனே
பேயியொரு விடைகேட்டு விளக்கியதை நீகூறி
பாவங்கள் ஒழித்திடவே பரவிநின்றாய்
சோலையிலே!

தித்திக்கும் தேன்பாகாய் தெவிட்டாத
தீங்கனியாய்
சித்திக்கும் உன்நாமம்; பிறவியாம் பிணியகல
பற்றினேன் உன்பாதம் பரமனுக்
கிளையோனே
வெற்றிக்கு வழிகாட்டுவேல்விழியாள்
நாயகனே!



# ஆடல் காணீரோ...

கம்பன் கவிநயமணி

**வே. தியாகராஜன்** [26]

எந்த விதமான தடை ஏற்பட்டாலும் பாணபத்திரன் தனது கோயிலுக்கு வந்து பாடும் கடமையை கொஞ்சம் கூடத் தவறாமல் செய்வான் என்பதை உலகிற்குக் காட்ட இறைவன் விரும்பினார். இறைவனாணையால், கடலை எடுத்துப் பூமியின் மீது கவிழ்த்து விட்டார்களோ என எண்ணும்படி பெருமழை பெய்யலாயிற்று, அந்தப் பெருமழையை மலர் மழையாக நினைத்து, நனைந்து கொண்டே வந்த பாணபத்திரன், திருக்கோயிலுள்நுழைந்து காமனின் எதிரியான இறைவனைப் பாடி, இறைவனது கருணை மழையிலும் நனையும் பேறு பெற்றுத் தேன்மாரி எனும்படி பாடினார்.

‘‘மாமாரியிடை நனைந்து வருவான் அம்மாரி தன்னைப்
பூமாரி என நினைந்து திருக்கோயில் புகுந்தெய்தித்
காமாரிதனைப் பணிந்து கருணைமாரியின் நினைந்து
தேமாரி பொழிவதெனத் தெள்விளியாழ் வாசிப்பான்’’.

ஆகா, ஊஊ என்ற இரு கந்தருவர்கள் இறைவனைப் பாடினார்கள். அவர்களது பாடலை மெச்சிய பரமன், தனது காதிலே குழைகளாக இருந்து என்றும் பாடிக்கொண்டே இருக்குமாறு அருள்பாலித்தார். அப்படிப்பட்ட கருணாமூர்த்தி தன்னைப் பாடும் பாணபத்திரன், தரையில் ஈரத்தில் சேற்றில் நின்று பாடுவது கண்டு ‘‘இதன் மேல் நின்று பாடுக’’ எனக் கூறி ஒரு பலகையிட்டார்.

‘‘பாடுவார் இருவர்க்கன்று பரிசிலாக் கொடுத்த சங்கத்
தோடுவார் செவியி லூட்டும் தொண்டு கண்டு இதன் மேல் நின்று
பாடுவாய்; உனக்கே இந்தப் பலகை என்று ஆழ்ந்த அன்பின்
நாடுவார் விசும்பிற் கூறி நகைமணிப் பலகை யிட்டார்’’.

அந்தப் பொற்பலகையில் ஏறி நின்று பாடிவிட்டு, இறைவனது திருவருளை எண்ணி வியந்து கொண்டு பலகையைக் கையிலெடுத்துக் கொண்டு வரும்போது மழை பெய்த அடையாளத்தையே காணவில்லை. பாண்டியன் இறைவனது அருளை அறிந்து, அவர் கொடுத்த பலகையின் மீது பாணபத்திரனை நிற்கச் செய்து வணங்கி உபசரித்தான். பின் வரகுண பாண்டியன் முத்தியடைந்தான். அவனது மருமகனான இராசராச பாண்டியன் அரசை ஏற்றான்.

இராசராச பாண்டியனுக்கு அநேக மனைவியரும் காமக் கிழத்தியரும் உண்டு. அந்தக் காம கிழத்தியருள் மிகவும் அழகியும் பாண்டியனுக்கு உயிர் போன்றவளுமான ஒருத்திக்கும் பாணபத்திரன் மனைவிக்கும் இசை சம்பந்தமாக ஒரு பகை ஏற்பட்டது. பத்திரன் மனைவிக்கு எதிராக ஒரு பாண் மகளைப் பாடச் செய்து அவள் செருக்கை அடக்க வேண்டுமெனப் பாண்டியனிடம் தெரிவித்தாள். அவள் விருப்பப்படி ஈழநாட்டிலிருந்து ஒரு பாடினியை வரவழைத்த பாண்டியன் ‘‘பெண்ணே! பத்திரன் மனைவியை என் முன்னர் இசைப்போருக்கு வருமாறு அழை: நான் அவள்பக்கம் பேசினாலும் விடாதே’’ என்று கூறினான். இவ்வாறு ஏற்பாடு செய்த பாண்டியன் ஒன்றும் அறியாதவன் போல் பத்திரன் மனைவியை அழைத்து ‘‘ஈழ தேசத்திலிருந்து தன்னுடன் எவரும் பாட முடியாது எனத் தருக்குரைத்துக் கொண்டிருக்கும் பாடினிக்கு நேராகப் பாட முடியுமா’’ எனக் கேட்க ‘‘அரசே கூடல் நாயகனருளும் என் கற்பு நிலையும் துணையாயிருக்க என்னால் அவளை வெல்ல முடியும்’’ எனக் கூறினாள்.

மறு நாள் காலையில் அரச சபையிலே பாடினி, இசையின் குற்றங்கள் குணங்கள் முதலான விவரங்கள் பற்றிப் பத்திரன் மனைவியிடம் விவரம் கேட்டு வாதுக்கழைக்க, பத்திரன் மனைவி, ‘‘நான் இசைப்போருக்கே வருவேன். விவாதமான வசைப்போர் செய்ய முடியாதென்றாள். பாண்டியன் விலக்குவது போல் நடித்துப் பின் ‘‘இசைப்போரே செய்யுங்கள்’’ எனக் கூறினான். இசைப்போர் ஆரம்பித்தது. பத்திரன் மனைவியே நன்கு பாடினாள். பாண்டியன் ‘‘ஈழத்தேசத்து பாடினியே நன்கு பாடினாள்’’ எனக் கூறினான். ஞானிகளாக இருப்பினும் மன்னவன் சொல்லுவதை ஏற்றுக் கொள்ளுவது வழக்கன்றோ.



'தென்னவன் உட்கோள் எல்லை தெரிந்தனர்
அவையத்துள்ளார்
அன்னவன் புகழ்ந்தவாறே புகழ்ந்தனர்
அவளைத்தானே
முன்னவன் அருளைப் பெற்று மும்மையும்
துறந்தோரேனும்
மன்னவன் சொன்னவாறே சொல்வது
வழுக்காறன்றோ''

''ஒரே நாளில் இவர்களது வாதின் முடிவை எவ்வாறு கூறுவது? என்ற பாண்டியன் மறு நாளும் தன் முன் மீண்டும் பாடுமாறு இருவருக்கும் கட்டளையிட்டான். ஈழப் பாடினி நிச்சயம் தான் வெற்றி பெறுவேன் என எண்ணி கம்பீரமாகத் தன் வீடு சேர்ந்தாள். பத்திரன் மனைவி மனம் நொந்து வீடு சென்று, ''பாண்டியன் உருவெடுத்து மதுரையை ஆண்ட பெருமானே! அரசன் தன் அன்பு சென்ற வழியில் தீர்ப்பளிக்கிறான். அவன் சொற்படி சபையும் கேட்கிறது. நடுநிலையுடன் யார் என் பக்கம் நியாயம் கூறுவார்கள்? உன் அருள்தான் துணை செய்ய வேண்டும்' என இறைவனை வேண்ட 'பெண்ணே! நாளைய தினம் உனக்கு வெற்றி கிடைக்குமாறு செய்வேன்' என இறைவன் அசரீரியாகப் பேசினார்.

மறுநாளும் பாண்டியன் தன் சபையில் ''ஈழ தேசத்தின் பாடினியே வென்றாள்'' எனக் கூறினான். மனம் நொந்த பத்திரன் மனைவி'' ''பாண்டிய மகாராசனே! நடு நிலை இழந்து விட்டீர். நீங்கள் கூறிய தீர்ப்பையும் சபையும் ஏற்றுக் கொண்டு விட்டது. சோமசுந்தரப் பெருமான் சந்நிதியில் பாடுகிறோம். அங்கு மனம் துணிந்து வென்றவர் எவர் என்பதைக் கூறுங்கள்'' என்ன, அரசனும் சம்மதித்தான்.

மறுநாள் சிவபெருமானின் சன்னதியில் பாடுவதற்குப் பத்திரன் மனைவியும் பாடினியும் வந்தபோது பெருங்கூட்டம் கூடியது. சோமசுந்தரப் பெருமானும் அங்கு ஒரு புலவர் வேடந்தாங்கி வந்து அமர்ந்திருந்தார். போட்டி தொடங்கியது. ஈழ தேசத்துப் பாடினியே வென்றதாகக் கூற வந்த பாண்டியன் இறைவனருளால் திடீரென்று மனம் மாறி, ''பத்திரன் மனைவியே வென்றாள்'' எனக் கூறினான். சபையும் அவ்வாறே கூறியது. தோற்ற ஈழ தேசத்துப் பாடினியின் கழுத்தில் பாணபத்திரனின் மனைவியை ஏற்றுவித்தனர். அப்போது ''இது அற்புதம், அற்புதம்!'' எனக் கூறிக் கொண்டே இறைவன் திடீரென்று மறைந்தனர். பாண்டியன் நடுங்கினான். பாடினிக்கும் பத்திரன் மனைவிக்கும் பரிசளித்தான்.

''அரசர்களது வலிமைகளெல்லாம் தெய்வங்களின் வலிமைக்கு முன் நில்லா. எல்லாத் தெய்வங்களுடைய வலிமையும் சிவபெருமானின் வலிமைக்கு முன் நில்லா'' என்று பாண்டியன் கூறி மகிழ்ந்தான். இதை பாணபத்திரன் மனைவியால் அறிந்து கொண்டேன்'' என்றான்.

''மன்னவர் வலிகளெல்லாம் தெய்வத்தின்வலி
முன் நில்லா
அன்னமா தெய்வம் செய்யும் வலியெல்லாம்
அரண் மூன்றட்ட
முன்னவன் வல்முன் நில்லா எனப்பலர் மொழிவ
தெல்லாம்
இன்ன பாண்மகளிற் காணப்பட்டதென்று
இறும்பூதெய்தா''.

(தொடரும்)

## உடம்பில் பஞ்ச பூதம்

நம் உடம்பிற்குள்ளே பஞ்ச பூதங்களும் இருக்கின்றன. இவற்றை நாம் அறிதல் அவசியமாகிறது. பாதத்திலிருந்து தொடைவரை மண், தொடையிலிருந்து இடுப்பு வரை நீர், இடுப்பிலிருந்து வயிறுவரை அக்கினி, நெஞ்சிலிருந்து மூக்குவரை காற்று, நெற்றிக்கு மேல் தலை வரை ஆகாயம்.

—டாக்டர் சாயிமாதா சிவபிருந்தாதேவி

# கந்தவேள் கருணை..!





டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

(56)

வளம் பல நிறைந்து அண்டர் பரவு தொண்டை நன்னாட்டில், மேற்பாடி என்னும் ஊரின் அருகில வள்ளிமலை என்று ஒரு மலை உள்ளது. அது காண்பார் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் கவினுடையது. அம்மலைச் சாரலில் அருந்தவமிக்க சிற்றூர் என்ற ஓர் ஊர் பெருமை பெற்றிருந்தது. சிறிய ஊராகப் பரந்திருக்கும் அதன் அழகே அழகு. எளிமையின் உருவான வள்ளியம்மை பிறக்க இச்சிற்றூரைக் காட்டிலும் உற்ற இடம் எதுவுண்டு, இன்றைய சித்தூரே அன்றைய சிற்றூர். அச்சிற்றூரில் வேடர் அரசனும், பண்டை தவமுடையயோனுமாகிய நம்பி என்பான் வாழ்ந்தான். அவன் தாய் வழி பத்தும், தநதை வழி பத்தும், தான் ஒன்றுமாக இருபத்தொரு தலைமுறைகளாக முருகப் பெருமானை ஆராதனை செய்து வந்தவன். அவனுக்குச் சில ஆண் மக்கள் இருந்தனர். பெண் மகவு இன்மையால் அவன் உளம் வருந்தினான். அடியவர் வேண்டும் வரங்களை வழங்கும் ஆறுமுகக் கடவுளை வழிபட்டும், குறி கேட்டும் வெறியாட்டயர்நதும், மகட்பேற்றை எதிர் பார்த்திருந்தான்.

கண்வ முனிவருடைய சாபத்தினால் திருமால் சிவமுனிவராகவும், திருமகள் மானாகவும் உபேந்திரன் நம்பியாகவும் பிறந்திருந்தனர். அந்தச் சிவ முனிவர் சிவபெருமானிடம் சித்தத்தைப் பதிய வைத்து, அம்மலையிடத்தே பாதவம் புரிந்து கொண்டிருந்தார். அப்போது முருகப் பெருமானின் திருவருளினால் இலக்குமியவதாரமாகிய அழகிய பொன்மயமான பெண்மான், முனிவர் முன்னே வந்து உலாவியது. மானைக் கண்ட சிவ முனிவர் காம உணர்ச்சி பெற்றுக் கலங்கினார். தெய்வப் புணர்ச்சி போலக் கண்மலரால் அம்மானிடத்து இன்பம் அநுபவித்துப் பின் மெய்யுணர்வால் தெளிவுற்று உறுதியான தவத்தில் நிலைபெற்று நின்றார்.

கந்தவேளைத் திருமணம் செய்து கொள்ளும் பொருட்டு ஆங்கொருசார் தவம் புரிந்து கொண்டிருந்த சுந்தரவல்லி, முன்பு தனக்கு முருகவேள் கட்டளையிட்டவாறு, அம்மான் வயிற்றில் கருவாகப் புகுந்தாள் முருகனின் அம்மான் திருமால், அம்மான் மகள் இம்மானின் மகளாக வந்தாள். மான், சூல் கொண்டது. அங்கும் இங்குப் உலாவித் திரிந்து உடல் நொந்தது. வேட்டுவப் பெண்கள் வள்ளிக் கிழங்கை அகழ்ந்தெடுத்த குழி ஒன்றில் பல்கோடிச் சந்திரப் பிரகாசமும் பரகத வண்ணமும் உடைய சர்வலோக மாதாவைக் குழந்தையாக ஈன்றது. மனித உருவில் தான் ஈன்ற அந்தக் குழந்தையைக் கண்டமான் மருண்டு ஓடிவிட்டது. வைகுண்டம் போய் இலக்குமியாயிற்று.

''பானிடத்தின் வருமைந்தன் முந்துநீ
மானிடத்தின் வருபென்ற வாய்மையான்
மானிடத்தின் வயினடைந் தாள்மரு
பானிடத்தின் பானாகும் மான்மகள்''

மான் வயிற்றில் பிறந்த குழந்தை அழுது கொண்டிருந்தது. அந்த அழுகையொலி, 'கின்னரர்கள் யாழ் ஒலியோ? கலைவாணியின் இன்னிசையோ?' என்று ஐயுறும் வண்ணம்மதுரமாக இருந்தது. அதனைக் கேட்டு அவ்விடத்தில் வேட்டைக்கு வந்த வேட்டுவர் மனமகிழ்ந்தனர். பிறந்த குழந்தை அழாவிடில் மற்றவர் அழவேண்டி வரும்தானே?

ஆறுமுகக் கடவுளுடைய திருவருள் தூண்டுதலால் வேட்டுவ மன்னனாகிய, நம்பி தன் மனைவியோடு பரிசனங்கள் சூழத் தினைப் புனத்துக்கு வந்திருந்தான். குழந்தையின் அழுகையொலி கேட்டு உள்ளமும் ஊனும் உருகினான். அழுகுரல் கேட்ட வழியே போனான். அங்கே பாற்கடலில் பிறந்த திருமடந்தையும் நாணுமாறு விளங்கும் திருக்குழந்தையைக் கண்டான். ''என் பாதவம் பலித்தது'' என்று உள்ளம் உவந்தான். ஆனந்தக் கூத்



தாடினான். தோள்களைத் தட்டினான். துள்ளிக் குதித்தான். தன் மனைவியிடம் குழந்தையைக் கொண்டு போய் தந்தான். அவள் குழந்தையை கையிலேந்தி உச்சி போந்து முத்தம் தந்தாள். மார் போடு அணைத்துக் கொண்டாள். அன்பின் மிகுதியினால் அவளுக்குப் பால் பெருகிற்று; பாலூட்டினாள். பின்னர் அனைவரும் சிற்றூர் போய்ச் சிறு குடிலில் புகுந்து குழந்தையைத் தொட்டிலில் இட்டனர். குறிஞ்சிப் பறையை ஒலித்துக் குரவைக் கூத்தாடினர். வெறியாட்டயர்ந்து முருகவேளுக்கு நல்விழா எடுத்தனர். வள்ளிக் கிழங்கை அகழ்ந்த குழியிற் கண்டெடுத்ததால் அக்குழந்தைக்கு வள்ளி என்று பெயரிட்டார்கள்.

''மூவா முகுந்தன் முதல்நாள் பெறும் அமுதை

தேவாதி தேவன் திருமைந்தன் தேவிதனை

மாவாழ் சுரத்தில்தம் மாமகளாப்
போற்றுகையால்

ஆவா குறவர்தவம் ஆர் அளக்க வல்லாரே''

உலகங்களுக்கெல்லாம் தாயாகிய வள்ளி நாயகியை வேட்டுவ மன்னனாகிய நம்பியும் அவன் மனைவி கொடிச்சியும் தங்கள் குழந்தையாக அன்பு செய்து இனிது வளர்த்தார்கள்.

வேட்டுவர்கள் செய்த அளவற்ற அருந் தவத்தால் அகிலஜக அண்ட நாயகியார் அவ் வேட்டுவர் குடிலில் தவழ்ந்தும், தளர்நடை பயின்றும், முற்றத்தில் உள்ள வேங்கை மர நிழலில் உலாவியும், சிற்றிலிழைத்துச் சிறு சோறு அட்டும், வட்டிலாட்டயர்ந்தும, முச்சி லில் மணற்கொழித்தும் அம்மானை யாடியும், தாய் தந்தையரை மகிழ்வித்தார். எளிய மக்களுக்குத்தான் இறைவியின் அருள் கூடுமென்பதற்கு இஃதோர் உதாரணம்.

வள்ளியம்மைக்கு வயது பன்னிரண்டு ஆகியது. தாயும் தந்தையும் அப்பருவத்தைக் கண்டு தம் குல வழக்கப்படி அவளைத் தினைப் புனத்தில் உயர்ந்த பரண்மீது காவல் வைத்தார்கள்.

பரண்பேல் ஏறி நின்று, இறைவன் திருநாமங்களாகிய கவண் கற்களை எறிந்து மும்மலங்களாகிய பறவைகள் கொத்தாதபடி சிவகதி ஆகிய கதிருடன் கூடிய ஞானப் பயிரைக் காத்து வந்தாள் வள்ளி. முத்தொழிலையும், மூவரையும் காக்கும் முருகப் பெருமானுடைய தேவியாகிய வள்ளிப் பிராட்டியாரை வேட்டுவர்கள் தினைப்புனத்தைக் காக்க வைத்தது, ''எளிதாகக் கிடைத்த உயர்ந்த ரத்தின மணியைத் தூக்கணங்குருவி இருளோட்டத்தன்

கூட்டில் வைத்தது போலிருந்தது'' என்பார் கச்சியப்பர்.

''காட்டில் எளிதுற்ற கடவுள்மணி
யைக்கொணர்ந்து

கூட்டில் இருளோட்டக் குருகுய்த்த
வாறன்றோ

தீட்டுசுடர் வேற்குமரன் தேவியாம்
தெள்ளமுதைப்

பூட்டுசிலைக் கையார்புனம்காப்ப
வைத்ததுவே''.

தினைப்புனத்தில் எத்திசையும் பார்க்கத் தக்க பரண்மீது நின்ற வள்ளியம்மையார், தினைக் காப்பதற்குவேண்டியகருவிகளை ஏந்தி, கிளி, காடை, கவுதாரி, முதலிய பறவை இனங்களை ஓட்டினார், மான், முட்பன்றி, யானை முதலிய மிருகங்களையும் ஓட்டினார். 'பூவைகாள்! புறவங்காள்! மணிக்கிளிகாள்! குயில்காள் ஆலோலம் ஆலோலம்'' என்று இனிமை நிரம்பத் தனித்தனி கூவியும் தினைப்புனத்தைக் காவல் செய்து வந்தார்.

''பூவைகாள், செங்கட்புறவங்காள் ஆலோலம்

தூவிமா மஞ்ஞைகாள், சொற்கிளிகாள்
ஆலோலம்

கூவல்சேர்வுற்ற மயிலினங்காள் ஆலோலம்

சேவல்காள் ஆலோலம் என்றாள்
திருந்திழையாள்''

மைனாக்கள், புறாக்கள், மயில்கள், கிளிகள், குயில்கள், சேவல்கள் முதலாயின கவண்கல் வீச்சினால் சிதறி ஓடின. ஓடியவை அவள் அழகாலும் குரல் இனிமையாலும் மீண்டும் மீண்டும் திரும்பி வந்தன.

வள்ளிநாயகியாருக்கு அருள் புரியும் பொருட்டு, முருகக் கடவுள் கந்தமலையை விட்டு இறங்கி, புவிக்குயிராகிய திருத்தணிகை மலையில் தனியே வந்து எழுந்தருளினார். குல மரபின்படியும், முன்வினைப் பயன்படியும், வள்ளிக்கு இளமை முதலே முருகப் பெருமான் மீது மனம் நிறைந்த அன்பு உண்டாயிற்று, வயதும் பருவமும் அந்த வளர வளர்ந்து உலகப் பந்துக்கள் மேல் அன்பு தேயத் தொடங்கிவிட்டன. முருகப் பெருமானை யன்றி வேறொன்றையும் மனம் நாடவில்லை

நாரத முனிவர் இதனை அறிந்தார். தினைப்புனத்தில் காவல் காத்து நின்ற வள்ளியம்மையாரிடம் நாரதர் சென்று கைதொழுதார். ''ஆகா, என்னே இவ்வம்மையார் பேரழகு! இப்பெருமாட்டியார் முற்பிறப்பில் திருமாலுடைய திருமகளாவார்; சரவணப் பொய்கையில் பெருந்தவம் புரிந்து குமாரக் கடவுள் கட்டளையிட்டபடி இங்கு தோன்றித் தினைப்புனத்தைக் காவல் செய்து கொண்டிருக்கின்றார். இவர் ஆறுமுகக் கடவுளுக்குத் தேவியாகும் நற்றவமுடையவர். இவருடைய அருந்தவத்தின் பெருமையையும், பேரழகின் பெருமையையும் அளவிட வல்லார் யாவர்? முருகனுக்கும் வள்ளிக்கும் மணவினை உலகுய்ய விரைவில் நிகழ்வது சிறந்த பயனாம்'' என்று எண்ணினார். வள்ளியம்மையை வணங்கி விடைபெற்றுக் கொண்டு திருத்தணிகையை அடைந்தார்.

திருவேலிறைவன் திருவடியில் வீழ்ந்து பன்முறை பணிந்து, ''ஞான சக்திதர! ஸ்வாமியே! ஞான பண்டித! ''ஞானாகரரே! ஞானோபதேச குருபரரே! ஞானவிநோதரே!'' என்று யாழ் மீட்டிப் பாடிப் பரவி நின்றார் நாரதர். அவ்வாறு துதித்தநாரதருக்குத்தணிகேசர் தண்ணருள் புரிந்தார். இளம் பூரணரது இன்னருளைப் பெற்ற இசை வாணர் 'எம் பெருமானே! முன்னைப் பிறவியில் திருமாலுடைய திருமகளாகிய சுந்தரவல்லியம்மையார், சரவண தடாகத்தில் இருந்து, தேவரீரை மணந்து கொள்ளும் பொருட்டுப் பெருந்தவம் புரிந்தார். அப்போது தேவரீர் மதான்றி அருள் புரிந்து பணித்தவாறு வள்ளிமலையில் மானிட முனிவருக்குப் பிறந்து நம்பி என்ற வேட்டுவ மன்னனிடம் வள்ளி என்ற திருநாமத்துடன் வளர்ந்து தினைப்புனத்தைக் காவல்புரிந்து கொண்டிருக்கிறார். எங்கும் நீக்கமறநிறைந்து முழுதொருங்குணர்ந்து முழு முதலவராகிய தேவரீருடைய திருவுள்ளம் அறியாததுண்டோ? அம்மாதரசியின் அழகில் ஆயிரத்தில் ஒரு கூறும் இலக்குமி தேவிக்கு இல்லை. தவக்கொழுந்தாகிய அத்தையல் நாயகியாரை உலகம் உய்யுமாறு தேவரீர் திருமணம் செய்து கொண்டு அடியேங்களுக்கு அருள் புரிவீர்!'' என்று விண்ணப்பம் செய்து கொண்டார்.

தூது வந்த நாரதர் கூறியதைக் கேட்ட ஆறுமுகப் பெருமான் மகிழ்ந்தார். ''நாரத! நன்று, நன்று. நமக்கும் அது திருவுளந்தான்'' என்று திருவாய் மலர்ந்தருளி, நாரதரை அனுப்பி வைத்தார்.

—(தொடரும்)

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002



மயிலை அருள்மிகு கபாலீசுவரர் ஆலயத்தில் 3.2.93 பேரறிஞர் அண்ணா நினைவு நாளன்று பொது விருந்து மற்றும் சிறப்பு வழிபாடு சிறப்புற நிகழ்த்தப் பெற்றது. மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திருமிகு கே. ஏ. செங்கோட்டையன் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். சென்னை மாவட்ட திருக்கோயில்கள் நிர்வாக வாரியத் தலைவரும் மயிலை சட்டமன்ற உறுப்பினரு மான டி. எம். ரங்கராஜன் உடன் உள்ளார். துணை ஆணையாளரும் நிர்வாக அதிகாரியுமான திரு கு. சிதம்பரம் பி.ஏ., அவர்கள் விழா ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள்.







மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி ஜெ. ஜெயலலிதா அவர்களின் சீரிய தலைமையில் 23.2.93 அன்று தலைமைச் செயலகத்தில் திருக்கோயில் நிர்வாக வாரியக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருக்கோயில் நிர்வாக வாரிய உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.